தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**23.07.2013**

**ஆழியாறு அணையில் பாசனத்துக்குத் தண்ணீர் திறப்பு**



ஆழியாறு அணையில் இருந்து பழைய ஆயக்கட்டுப் பாசனத்துக்கு திங்கள்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது.

முதல்வர் ஜெயலலிதா உத்தரவின்படி, கோவை மாவட்டம் ஆழியாறு அணையிலிருந்து தண்ணீரை பொதுப்பணித் துறை அமைச்சர் கே.வி.இராமலிங்கம், வேளாண் துறை அமைச்சர் செ.தாமோதரன் ஆகியோர் திறந்துவிட்டனர்.

பழைய ஆயக்கட்டில் ஆனைமலை, அம்பராம்பாளையம் பகுதிகளைச் சேர்ந்த 6400 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். அணையிலிருந்து ஆயக்கட்டுப் பாசனத்திற்கு 100 கன அடியும் குடிநீர்த் தேவைக்கு 50 கன அடியும் என மொத்தம் 150 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டது. வரும் அக்.15-ஆம் தேதி வரை பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்படும்.

பணிகளை முடிக்க உத்தரவு:

பொதுப்பணித் துறை அமைச்சர் கே.வி.இராமலிங்கம், வேளாண் துறை அமைச்சர் செ.தாமோதரன் ஆகியோர் காண்டூர் கால்வாயில் ஜீரோ பாயிண்ட் முதல் 4.27 கிலோ மீட்டர் தூரத்தில், 150 மீட்டர் தூரத்திற்கு நடைபெற்று வரும் பணிகளையும், 5575 மீட்டர் முதல் 6030 மீட்டர் வரை 455 மீட்டர் தூரத்திற்கு நடைபெற்று வரும் பணிகளையும் பார்வையிட்டனர்.

அப்போது, பொதுப்பணித் துறை அலுவலர்களிடம் ஜூலை இறுதிக்குள் பணிகளை முழுமையாக முடிக்க வேண்டுமென உத்தரவிட்டனர்.

இந் நிகழ்ச்சியின்போது, சட்டப்பேரவைத் துணைத் தலைவர் பொள்ளாச்சி வி.ஜெயராமன், மாவட்ட ஆட்சியர் மு.கருணாகரன், தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. கழகத் தலைவர் உடுமலை கே.ராதாகிருஷ்ணன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் எம்.ஆறுமுகம், எம்.கே.முத்துக்கருப்பண்ணசாமி, பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் ரங்கநாதன், ஆனைமலை ஒன்றியத் தலைவர் கஸ்தூரிவாசு, பொள்ளாச்சி நகர்மன்றத் தலைவர் கிருஷ்ணகுமார், பொதுப்பணித் துறை செயற் பொறியாளர் சிவகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வு நிலை: இன்று மழை பெய்ய வாய்ப்பு**

தமிழகம், புதுவையின் சில பகுதிகளில் செவ்வாய்க்கிழமை மழையோ, இடியுடன்கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகம், புதுவையில் சில நாள்களாக மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியுள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலையின் காரணமாக தமிழகத்துக்கு மழை கிடைக்க வாய்ப்பில்லை.

தமிழகம், புதுவையின் சில பகுதிகளில் செவ்வாய்க்கிழமை மழையோ, இடியுடன்கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழகத்தில் பெய்த மழை அளவு (திங்கள்கிழமை காலை வரையிலான நிலவரம் - மி.மீ.): சின்னக்கல்லாறு - 70, நடுவட்டம் - 60, வால்பாறை - 50, பெரியாறு - 40, மகாபலிபுரம், கூடலூர், தேவாலா - 20, குளச்சல், குழித்துறை, பேச்சிப்பாறை, இரணியல், செங்கல்பட்டு, உதகை, ஏற்காடு, பொள்ளாச்சி, உத்திரமேரூர், பாப்பிரெட்டிப்பட்டி, ஓமலூர் - 10.

சென்னையின் பல்வேறு பகுதிகளில் திங்கள்கிழமை மாலை முதல் இரவு வரை மழை பெய்தது.

**பால் விலையை ஒரு லிட்டருக்கு 2 ரூபாய் அளவுக்கு உயர்த்த அரசு திட்டம்**

பால் விலையை ஒருலிட்டருக்கு 2 ரூபாய் அளவுக்கு உயர்த்த கர்நாடக அரசு திட்டமிட்டுள்ளது.

கர்நாடக பால் கூட்டமைப்பு(கே.எம்.எஃப்) நஷ்டத்தில் இயங்கிவருவதாகவும், அதை ஈடுசெய்வதற்காக நந்தினி பால் விலையை உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளதாக அண்மையில் சட்டப்பேரவையில் கால்நடைபராமரிப்புத்துறை அமைச்சர் டி.பி.ஜெயசந்திரா அறிவித்தார். ஆனால், விலை உயர்வுக்கான அளவு குறித்து இன்னும் முடிவெடுக்கவில்லை என்றும் தெரிவித்திருந்தார். இதன் பின்னணியில், பால் விலையை எந்த அளவுக்கு உயர்த்துவது என்பது குறித்து கர்நாடக பால் கூட்டமைப்பு அதிகாரிகள் அண்மையில் விவாதித்துள்ளனர். பால் விலையை ஒருலிட்டருக்கு 3 ரூபாய் அளவுக்கு உயர்த்துமாறு கே.எம்.எஃப்., அரசுக்கு பரிந்துரை வழங்கியுள்ளது. இது குறித்து கே.எம்.எஃப். தலைவர் சோமசேகரரெட்டி, மேலாண் இயக்குநர் பிரேம்நாத் ஆகியோருடன் முதல்வர் சித்தராமையா, அண்மையில் ஆலோசனை நடத்தியுள்ளார். விலை உயர்வு தொடர்பாக கே.எம்.எஃப்.முன்வைத்துள்ள பரிந்துரையை பரிசீலித்துள்ள மாநில

அரசு, ஒருலிட்டர் பால் விலையை ரூ.1 அல்லது ரூ.2 அளவுக்கு உயர்த்த யோசித்துவருகிறது. பால்விலை உயர்வை ஆக.1-ஆம்தேதிமுதல் அமல்படுத்த மாநில அரசு திட்டமிட்டுவருகிறது. இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு ஓரிரு நாளில் வெளியாகலாம் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

**பாபநாசம் அணையில் கூடுதல் தண்ணீர் திறக்க நடவடிக்கை: ஆட்சியர்**

தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் பாபநாசம் அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் மாவட்ட ஆட்சியர் ஆஷிஷ்குமார்.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற மக்கள் குறைதீர் நாள் கூட்டத்தின்போது ஆட்சியர் ஆஷிஷ்குமார் அளித்த பேட்டி:

தூத்துக்குடி மாவட்டத்தில் கார் சாகுபடி மேற்கொள்ள பாபநாசம் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இந்தத் தண்ணீர் கோரம்பள்ளம் குளத்துக்கு இதுவரை வரவில்லை என விவசாயிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

பேய்குளம் வரை தண்ணீர் வந்துள்ளதாகவும், அடுத்து பெட்டைகுளம் நிரம்பியபிறகு கோரம்பள்ளம் குளத்துக்கு தண்ணீர் விடப்படும் என வேளாண்மைத் துறை அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் பாபநாசம் அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் பெற்றுத்தர பேச்சுவார்த்தை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். மழைக்காலம் நெருங்குவதால் மழைநீரை சேமிக்கும் வகையில் கால்வாய்கள், குளங்கள் தூர்வாரப்பட்டு வருகிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில் வறட்சி நிவாரண நிதி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அதிகளவில் நிவாரணம் வழங்கப்படும்போது சிறிய அளவிலான பிரச்னைகள் ஏற்படுவதை தவிர்க்க முடியாது. சில இடங்களில்

தங்களுக்கு நிவாரணத் தொகை கிடைக்கவில்லை என விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது. சில விவசாயிகள் பயிரிடாமலேயே நிவாரண நிதி வாங்கியுள்ளதாவும் புகார் எழுந்துள்ளது. அதுபற்றியும் விசாரணை நடைபெற்று வருகிறது. இந்த விவகாரத்தில் யார் தவறு செய்திருந்தாலும் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

**இரணியலில் 10 மி.மீ. மழை பதிவு**

குமரி மாவட்டத்தில் அதிக பட்சமாக இரணியலில் 10 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பரவலாக சாரல் மழை பெய்து வருகிறது.

ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு தொடங்கி திங்கள்கிழமை அதிகாலை வரை மாவட்டத்தில் பெய்த மழையளவு விவரம் (மி.மீட்டரில்):

சிற்றாறு 1- 2,

சிற்றாறு 2- 1,

மாம்பழத்துறையாறு- 2,

நாகர்கோவில்- 2.4,

பூதப்பாண்டி- 2.5,

சுருளோடு- 2.5,

கன்னிமார்- 3.2,

பாலமோர்- 9.8,

கொட்டாரம்- 5.8,

இரணியல்- 10,

ஆனைக்கிடங்கு- 2,

அடையாமடை- 3.6,

கோழிப்போர்விளை- 8.6,

புத்தன் அணை- 6.4,

திற்பரப்பு- 5.8.

பேச்சிப்பாறை அணைக்கு விநாடிக்கு 539 கனஅடி நீர்வரத்தும், 524 கனஅடி வெளியேற்றமும் இருந்தது.

பெருஞ்சாணி அணைக்கு 361 கனஅடி நீர்வரத்தும், 439 கனஅடி வெளியேற்றமும்

இருந்தது.

**குறுவை தொகுப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு இடுபொருட்கள்**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் வேளாண்மைத்துறை சார்பில் தமிழக முதல்வரின் "குறுவை தொகுப்புத் திட்டம் 2013' -ன் கீழ் விவசாயிகளுக்கு இடுபொருட்களை தமிழக வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் ஆர். வைத்திலிங்கம் சனிக்கிழமை வழங்கினார்.

விழாவில் அவர் பேசும் போது:

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' என்ற வள்ளுவனின் வாக்கிற்கேற்ப உழவுத் தொழிலே இவ்வுலகை வாழ வைக்கும் தொழிலாகும். உழவுத் தொழிலுக்கு

வந்தனை செய்யும் பொருட்டும், உழவர்களின் வாழ்வில் ஒளியேற்றிடவும் தமிழக முதல்வர் இரண்டாம் பசுமை புரட்சிக்கு வித்திட்டு காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு பல்வேறு சிறப்பு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்.

இதன் தொடர்ச்சியாக தற்போது ஆழ்குழாய் கிணறு வைத்து குறுவை சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு "குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டம் 2013' அறிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் டெல்டா மாவட்டங்களுக்கு 1 லட்சம் ஏக்கர் நிலப்பரப்புக்கு ஏக்கருக்கு 8 பாக்கெட்டுகள் உயிர் உரங்களும், ஒரு லிட்டர் அசாடிரக்டின் தாவர பூச்சிக்கொல்லி மருந்தும் மற்றும் 5 கிலோ நெல் நுண்ணூட்டமும் குறுவை சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு விலையில்லாமல் வழங்கிடவும், 33 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்புக்கு ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சமும், ரூ. 6 கோடி மதிப்பில் விலையில்லாமல் விவசாயிகளுக்கு வழங்கிட தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

ரூ. 12 கோடி மதிப்பில் ஒரு ஏக்கருக்கு 180 மீட்டர் நீளம் கொண்ட ஆழ்துளை பைப்புகள் (90 மிமீ விட்டம் கொண்டது) 6 ஆயிரம் ஏக்கருக்கு விவசாயிகளுக்கு வழங்கிட தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாவட்டத்துக்கு 26 ஆயிரத்து 855 ஏக்கருக்கு விலையில்லா நெல், விலையில்லா உயிர் உரங்களும், விலையில்லா தாவர பூச்சிக்கொல்லியும் மற்றும் 8 ஆயிரத்து 863 ஏக்கருக்கு விலையில்லா ஜிப்சமும் வழங்கப்படும், தஞ்சாவூர் மாவட்டத்துக்கு 1610 யூனிட்டுகள் விலையில்லா ஆழ்துளை பைப்புகள் வழங்கப்படும். எனவே விவசாயிகள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி விலையில்லா இடுபொருட்களை பெற்று குறுவையில் அதிக மகசூல் பெற வேண்டும் என்றார்.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன், மாவட்ட ஊராட்சித் தலைவர் அமுதாராணி ரவிச்சந்திரன், தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் துரை திருஞானம், ஒன்றிய குழுத்தலைவர் வீ. சூரியமூர்த்தி, பேரூராட்சி துணைத்தலைவர் மா. சேகர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 79.94 அடியாக இருந்தது.**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 79.94 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 32,860 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து நொடிக்கு 3,000 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து பாசனத்துக்குத் தண்ணீர் திறக்கப்படவில்லை.

**மேட்டூர் நீர்மட்டம் 79 அடியை எட்டியது**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 2.35 அடி உயர்ந்து 79 அடியை எட்டியது. நீர்மட்டம் வெகுவாக உயர்ந்து வருவதால், ஆகஸ்ட் மாதத்தில் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கும் வாய்ப்பு உள்ளதாகக் கூறப்படுகிறது.

கர்நாடக மாநிலத்தில் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழையால் கபினி அணை நிரம்பியது. கிருஷ்ணராஜசாகர் அணை நிரம்பும் நிலையில் உள்ளது.

இதையடுத்து, அணைகளின் பாதுகாப்பு கருதி உபரிநீர் திறந்துவிடப்படுகிறது. இதனால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வருவதால், நீர்மட்டம் வெகுவாக உயர்ந்து வருகிறது.

அணைக்கு திங்கள்கிழமை நீர்வரத்து நொடிக்கு 30,289 கன அடியாக அதிகரித்தது. நீர்மட்டம் 79.10 அடியாக உயர்ந்தது. குடிநீர்த் தேவைக்காக அணையிலிருந்து நொடிக்கு 3,796 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. நீர் இருப்பு 41.06 டி.எம்.சி.யாக உள்ளது. ஒரே நாளில் அணையின் நீர்மட்டம் 2.35 அடி உயர்ந்துள்ளது.

நீர்வரத்து அதிகரித்துள்ளதால் ஏமனூர், நாமமரை, ஒட்டனூர் பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பாக இருக்கவும், மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்ல வேண்டாம் என்றும் வருவாய்த் துறையினர் எச்சரிக்கை விடுத்தனர்.

காவிரியில் வெள்ளம் ஏற்பட்டால் வலைகள் சேதமடைவதுடன், உயிருக்கும் ஆபத்து ஏற்படலாம் என்பதால், மீனவர்கள் திங்கள்கிழமை மீன்பிடிக்கச் செல்லவில்லை. கரையோரம் இருந்த பரிசல்களை மேடான பகுதிக்கு எடுத்துச் சென்றனர்.

நீர்வரத்து இதே நிலையில் நீடித்தால் இன்னும் 15 நாள்களில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 100 அடியை எட்டும் வாய்ப்புள்ளது.

பிலிகுண்டுலுவில்

30,000 கன அடி நீர்வரத்து

காவிரி ஆற்றில் தமிழக எல்லையான பிலிகுண்டுலுவில் திங்கள்கிழமை காலை நீர்வரத்து 30,000 கன அடியாக இருந்தது.

பிலிகுண்டுலுவில் ஞாயிற்றுக்கிழமை தண்ணீர் வரத்து நொடிக்கு 40,000 கன அடியாக இருந்தது. காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்ததால் ஒகேனக்கல் அருவிகளில் வெள்ளம் ஆர்ப்பரித்துக் கொட்டுகிறது.

இதையடுத்து, தருமபுரி மாவட்ட நிர்வாகம், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அருவிகளில் குளிக்கவும், பரிசலில் செல்லவும் தடை விதித்துள்ளது.

**அசோலா தீவனப் பயிர் விற்பனைக்கு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையம் தெரிவித்துள்ளது.**

அசோலா தீவனப் பயிர் விற்பனைக்கு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, நாமக்கல் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் பா.மோகன் வெளியிட்டுள்ள செய்தி:

கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்திலுள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் அசோலா விற்பனைக்கு உள்ளது. கால் நடை மற்றும் கோழிப்பண்ணை விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்கள் தங்கள் வயதில் உற்பத்தி செய்யவும், கால்நடைகளுக்கு தீவனமாக அளிக்கவும் வாங்கிப் பயன்பெறலாம். மேலும் விவரங்களுக்கு 04286 -266345, 266650 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு பெறலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மேட்டூர் நீர்மட்டம் 79 அடியை எட்டியது**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 2.35 அடி உயர்ந்து 79 அடியை எட்டியது. நீர்மட்டம் வெகுவாக உயர்ந்து வருவதால், ஆகஸ்ட் மாதத்தில் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கும் வாய்ப்பு உள்ளதாகக் கூறப்படுகிறது.

கர்நாடக மாநிலத்தில் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழையால் கபினி அணை நிரம்பியது. கிருஷ்ணராஜசாகர் அணை நிரம்பும் நிலையில் உள்ளது.

இதையடுத்து, அணைகளின் பாதுகாப்பு கருதி உபரிநீர் திறந்துவிடப்படுகிறது. இதனால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வருவதால், நீர்மட்டம் வெகுவாக உயர்ந்து வருகிறது.

அணைக்கு திங்கள்கிழமை நீர்வரத்து நொடிக்கு 30,289 கன அடியாக அதிகரித்தது. நீர்மட்டம் 79.10 அடியாக உயர்ந்தது. குடிநீர்த் தேவைக்காக அணையிலிருந்து நொடிக்கு 3,796 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. நீர் இருப்பு 41.06 டி.எம்.சி.யாக உள்ளது. ஒரே நாளில் அணையின் நீர்மட்டம் 2.35 அடி உயர்ந்துள்ளது.

நீர்வரத்து அதிகரித்துள்ளதால் ஏமனூர், நாமமரை, ஒட்டனூார் பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பாக இருக்கவும், மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்ல வேண்டாம் என்றும் வருவாய்த் துறையினர் எச்சரிக்கை விடுத்தனர்.

காவிரியில் வெள்ளம் ஏற்பட்டால் வலைகள் சேதமடைவதுடன், உயிருக்கும் ஆபத்து ஏற்படலாம் என்பதால், மீனவர்கள் திங்கள்கிழமை மீன்பிடிக்கச் செல்லவில்லை. கரையோரம் இருந்த பரிசல்களை மேடான பகுதிக்கு எடுத்துச் சென்றனர்.

நீர்வரத்து இதே நிலையில் நீடித்தால் இன்னும் 15 நாள்களில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 100 அடியை எட்டும் வாய்ப்புள்ளது.

பிலிகுண்டுலுவில்

30,000 கன அடி நீர்வரத்து

காவிரி ஆற்றில் தமிழக எல்லையான பிலிகுண்டுலுவில் திங்கள்கிழமை காலை நீர்வரத்து 30,000 கன அடியாக இருந்தது.

பிலிகுண்டுலுவில் ஞாயிற்றுக்கிழமை தண்ணீர் வரத்து நொடிக்கு 40,000 கன அடியாக இருந்தது. காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்ததால் ஒகேனக்கல் அருவிகளில் வெள்ளம் ஆர்ப்பரித்துக் கொட்டுகிறது.

இதையடுத்து, தருமபுரி மாவட்ட நிர்வாகம், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அருவிகளில் குளிக்கவும், பரிசலில் செல்லவும் தடை விதித்துள்ளது.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 69.07 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 69.07 அடியாக இருந்தது.அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 8,821 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 900 கன அடி

நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 10.57 டி.எம்.சி.

**விவசாய மாநாட்டு ஜோதிக்கு வரவேற்பு**

அகில இந்திய விவசாயிகள் சங்க 33-ஆவது அகில இந்திய மாநாடு, கடலூரில் வரும் 24-ஆம் தேதி தொடங்குகிறது. இதில், ஏற்றுவதற்காக பழனி ஆயக்குடி ஆர்.ராம்ராஜ் நினைவு ஜோதி கொண்டு செல்லப்படுகிறது.

அக் குழுவினருக்கு பல்லடம் பேருந்து நிலையம் முன் அகில இந்திய விவசாயிகள் சங்க பல்லடம் கிளை சார்பில் ஞாயிற்றுக்கிழமை வரவேற்பு அளிக்கப்பட்டது. கிளை கமிட்டித் தலைவர் பழனிசாமி, ப.கு.சத்தியமூர்த்தி உள்பட பலர் பங்கேற்றனர்.

**கரும்பு விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை வழங்க காங்கிரஸ் வலியுறுத்தல்**

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் கரும்பு விவசாயிகளுக்குக் வழங்க வேண்டிய ரூ.8 கோடி நிலுவைத் தொகையை உடனடியாக வழங்க வேண்டும் என பேரவையில் காங்கிரஸ் உறுப்பினர் நமசிவாயம் வலியுறுத்தினார்.

புதுச்சேரி சட்டப்பேரவையில் திங்கள்கிழமை நடைபெற்ற நேரமில்லா நேரத்தில் நடைபெற்ற விவாதம்:

நமசிவாயம் (காங்கிரஸ்): கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகை ரூ. 8 கோடி உள்ளது. இத்தொகையை உடனடியாக வழங்க வேண்டும்.

மேலும் வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய ரூ.5 கோடியும் செலுத்தப்படாமல் உள்ளது. இதனால் விவசாயிகள் கடன் பெற முடியாமல் தவித்து வருகின்றனர். இது தொடர்பாக அரசு துரித நடவடிக்கை எடுத்து உடனடியாக கரும்பு

விவசாயிகளுக்கு நிலுவைத் தொகையினை வழங்க வேண்டும். முத்தரப்புக் குழுவைக் கூட்டி கரும்புக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும்.

பாஸ்கர்: ஏ.எஃப்.டி. ஆலை இயங்காத சூழ்நிலையில், அங்கு 8 மாதமாக ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கவில்லை.

இந்நிலையில், கடந்த 15 நாள்களுக்கு முன்பு அங்கு பணிபுரியும் பாலச்சந்திரன் என்பவரை ஆலை நிர்வாகம் நிரந்தரப் பணி நீக்கம் செய்துள்ளது. இது வேதனைக்குரிய விஷயம். இச்செயல், தனி நபரைப் பழிவாங்கும் செயல் ஆகும்.

ஆலையின் வாரியத் தலைவருக்குப் பிடிக்காதவர் என்ற ஒரே காரணத்துக்காக அவர் பழிவாங்கப்பட்டுள்ளார். எனவே, முதல்வர் இவ்விஷயத்தில் தலையிட்டு நிரந்தரப் பணி நீக்க உத்தரவைத் திரும்பப் பெற வேண்டும்.

ஓம்சக்தி சேகர் (அதிமுக): மழைக்காலம் தொடங்கவுள்ள நிலையில், இன்றளவும் கால்வாய்கள் தூர்வாரப்படவில்லை. நெல்லித்தோப்பு பகுதியில் கால்வாய்கள் தூர்வாரப்படாததால், மழை வெள்ளம் குடியிருப்புப் பகுதியில் புகுந்து விடுகிறது.

இது தொடர்பாக பலமுறை சம்பந்தப்பட்ட துறையிடமும், அரசின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டும் நடவடிக்கை இல்லை. மழைக்காலம் தொடங்கும் முன்பு கால்வாய்களைத் தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அசோக் ஆனந்த்: உயர்கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் பலர் கல்வியறிவு இல்லாதவர்கள். ஏழைகள். அவர்களுக்கு கல்விக் கடன் பெறுவது தொடர்பான நடைமுறைகள் தெரிவதில்லை.

எனவே, கல்விக்கடன் சிறப்பு முகாமை அரசு நடத்த வேண்டும். ஒரே இடத்தில் கல்விக் கடன் பெறுவதற்கான அனைத்து செயல்பாடுகளும் இருந்தால், அது மாணவர்களுக்கு எளிதான ஒன்றாக இருக்கும். பெற்றோர்களும் பயனடைவர்.

லட்சுமி நாராயணன்: புதுச்சேரி நகரின் பல்வேறு பகுதிகளிலும் குப்பைகள் அள்ளப்படுவதில்லை. இதனால், சுகாதாரச் சீர்கேடு ஏற்படுகிறது. இது தொடர்பாக அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு உறுப்பினர்கள் பேசினர்.

**விவசாய இயக்க வீர வரலாறு கண்காட்சி தொடக்கம்**

கடலூரில் விவசாய இயக்க வீர வரலாறு கண்காட்சியை மாநிலங்களவை உறுப்பினர் டி.கே.ரெங்கராஜன் ஞாயிற்றுக்கிழமை தொடங்கி வைத்தார்.

அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் 33-வது மாநாடு கடலூரில் வரும் 24 முதல் 27-ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

மாநாட்டை முன்னிட்டு, விவசாயிகள் இயக்கத்தின் வீர வரலாறை விளக்கும் கண்காட்சி கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே அமைக்கப்பட்டுள்ளது.

இக்கண்காட்சி ஜூலை 28-ம் தேதி வரை நடைபெறும்.

இந்தக் கண்காட்சியை மாநிலங்களவை உறுப்பினர் டி.கே.ரெங்கராஜன் திறந்து வைத்து பார்வையிட்டார். விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் ஜி.ஆர்.ரவிச்சந்திரன் தலைமை வகித்தார். மார்க்சிஸ்ட் நகரச் செயலர் வி.சுப்புராயன் வரவேற்றார்.

விவசாயிகள் சங்க மாநில பொதுச்செயலர் பி.சண்முகம், மாநிலத் தலைவர்கள் கே.முகமதுஅலி, எஸ்.திருநாவுக்கரசு, மார்க்சிஸ்ட் மாநிலக் குழு உறுப்பினர் மூசா, மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் எஸ்.தனசேகரன், ஜி.மாதவன், பி.கருப்பையன், ஒன்றியச் செயலர் ஜே.ராஜேஷ்கண்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**சம்பா சாகுபடிக்கு மேட்டூர் அணையை திறக்கக் கோரிக்கை**

சம்பா சாகுபடிக்கு மேட்டூர் அணையை உடனே திறக்க வேண்டும் என தமிழக அரசை வலியுறுத்தி கடலூர் தெற்கு மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சி கோரிக்கை விடுத்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

கடலூர் தெற்கு மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சி செயற்குழுக் கூட்டம் சிதம்பரத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

மாவட்டச் செயலர் வழக்குரைஞர் வேணு.புவனேஸ்வரன் தலைமை வகித்தார். ஒன்றியச் செயலர்கள் பூக்கடை கண்ணன், ரா.வேலு, சோ.இளவரசன், கார்த்தி, மு.சிவக்குமார், கவுன்சிலர் சேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நகரச் செயலர் முத்து.குமார் வரவேற்றார். மாநில ஒழுங்கு நடவடிக்கைக் குழு தேவதாஸ் படையாண்டவன், பேராசிரியர் செல்வகுமார் உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினர். நகரத் தலைவர் பெ.க.அருள் நன்றி கூறினார்.

ஜூலை 26-ல் சிதம்பரத்தில் நடைபெறும் ஒருங்கிணைந்த கடலூர் மாவட்ட பொதுக்குழுவுக்கு வருகை தரும் அன்புமணி ராமதாஸுக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது. பாமகவினர் மீது போடப்பட்டுள்ள பொய் வழக்குகளை தமிழக அரசு வாபஸ் பெற வேண்டும்.

பெண்களின் திருமண வயதை 18-லிருந்து 21 ஆக உயர்த்த மத்திய, மாநில அரசுகளை கோருவது.

சேத்தியாத்தோப்பு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நிலுவையில் உள்ள கரும்பு கிரயத் தொகையை விவசாயிகளுக்கு உடனே வழங்க வேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தலில் பாமக போட்டியிடும் அனைத்துத் தொகுதிகளிலும் பாமக வேட்பாளர்களை வெற்றி பெறச்செய்வது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**23.07.2013**

## மக்காச்சோளம், எள் பயிரிட விவசாயிகளுக்கு ஆலோசனை

திண்டுக்கல்:ஆடிப்பட்ட பயிர்களாக மக்காச்சோளம், எள் ஆகியவற்றை பயிரிட்டு பலனடையுமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மக்காச்சோளம், எள் போன்றவை ஆடியில் விதைக்கப்படும் பயிர்கள். தற்போது இதன் வரத்து குறைந்துள்ளது. கோழிப்பண்ணைகளில் இதன் தேவை அதிகரித்துள்ளது.

மக்காச்சோளம், எள் போன்றவற்றை ஆடியில் விதைப்பு செய்தால், அறுவடை செய்யப்படும் மாதங்களான செப்டம்பரில் என்ன விலை கிடைக்கும் என, திண்டுக்கல் மாவட்ட வேளாண்மை வணிகவரித்துறை துணை இயக்குனர் செல்வராஜ் தெரிவித்துள்ளார்.

அவர் கூறியுள்ளதாவது: உள்நாடு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் கடந்த 19 ஆண்டுகளாக உடுமலைப்பேட்டை சந்தையில் நிலவிய மக்காச்சோள விலையை ஆய்வு செய்தது. அதன்படி அக்டோபரிலிருந்து நவம்பர் வரை மக்காசோளம் குவிண்டாலுக்கு ரூ. 1300 லிருந்து 1400 வரை விற்கப்படும். எள் விலை சிவகிரி ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தின் நிலவரப்படி செப்டம்பரில் இருந்து டிசம்பர் வரை கிலோவிற்கு ரூ. 72 முதல் 76 வரை விலை இருக்கும் என தெரிவித்துள்ளது. போதுமான லாபம் கிடைக்கும் என்பதால், விவசாயிகள் மக்காச்சோளம், எள் பயிர்களை விதைக்கலாம், என்றார்.

## மண் பரிசோதனை அட்டை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்

திண்டுக்கல்:""திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு மண் பரிசோதனை அட்டையின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க வேண்டும்," என, கூடுதல் செயலாளர் வாசுகி தெரிவித்தார். திண்டுக்கல்லில் மாவட்ட ஆய்வுக்கூட்டம் நடந்தது. கலெக்டர் வெங்கடாசலம் உட்பட அனைத்து துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர். இதில் பங்கேற்ற கூடுதல் செயலர் வாசுகி கூறியதாவது:திருந்திய நெல் சாகுபடி திட்டம் 65 கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டம் எட்ட வேண்டிய இலக்கு குறைவாக உள்ளது. இத்திட்டம் குறித்து விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டும். வேளாண்மை பொறியியல் துறையில் உள்ள உபகரணங்களை பயன்படுத்த வேண்டும். மாவட்டத்தில் ஒரு லட்சத்து 23 ஆயிரம் விவசாயிகளின் நிலத்தில் மண் பரிசோதனைக்கான அட்டை பதிவு செய்யப்பட்டுள்ளது. 43 ஆயிரம் விவசாயிகளுக்கு மண் பரிசோதனை அட்டை வழங்கப்பட்டுள்ளது. 93 ஆயிரம் விவசாயிகள் மண் பரிசோதனை செய்துள்ளனர். மண் பரிசோதனை அட்டையின் அவசியம் குறித்து விவசாயிகளிடம் எடுத்துரைக்க வேண்டும். மேலும் அட்டையில் மண்ணின் தன்மை, அதில் பயிரிட வேண்டிய பயிர், உரங்கள் குறித்தும் தெளிவாக எழுத வேண்டும். விவசாய அதிகாரிகள், விவசாயிகளிடம் மண் பரிசோதனையின் நன்மைகளை எடுத்துரைத்து, அதிகளவு சாகுபடி செய்வதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும், என்றார்.

## தென்னையில் ஊடுபயிராக கொகோ

தேனி:தென்னையில் ஊடுபயிராக கொகோ சாகுபடி செய்ய வேண்டும், என விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறை அறிவுரை வழங்கியுள்ளது. தென்னையில் ஊடுபயிராக கோகோ சாகுபடி செய்ய இதுவே ஏற்ற தருணம். தென்னையில் இரண்டு மரங்களுக்கு நடுவில் ஒரு கொகோ சாகுபடி செய்யலாம்.

ஹெக்டேருக்கு 500 நாற்றுகள் வரை நடலாம். இதன் மூலம் குறைந்த முதலீட்டில் அதிக லாபம் கிடைக்கும். தென்னையும், கொகோவும் ஒன்றுக்கொன்று வளர்ச்சிக்கு உதவுகின்றன. இதனால் விளைச்சல் அதிகரிக்கும். ஆண்டிற்கு 800 கிலோ இலை உதிர்வதால் மண்ணின் அங்ககச் சத்து அதிகரிக்கும். சிறந்த முறையில் களைக்கட்டுப்பாடு செய்யப்படுகிறது. கொகோ பழத்தின் ஓடு உரமாகவும், மாட்டுத்தீவனமாகவும் பயன்படுகிறது. தவிர, 30 ஆண்டுகள் வரை பலன் தரும். தோட்டத்தில் மண் அரிப்பு தடுக்கப்படும். மண்ணின் ஈரப்பதம் பாதுகாக்கப்படும்.கொகோவில் செலவு போக, ஆண்டுக்கு 20 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும். கொகோ சாகுபடி செய்ய ஒரு ஹெக்டேருக்கு தோட்டக்கலைத்துறை 12 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள கன்றுகள் இதர பொருட்களை மானியமாக வழங்குகிறது. விவசாயிகள் தோட்டக்கலை அலுவலர், உதவி அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்.

## தோட்டக்கலை மாணவிகள் விவசாயிகளுக்கு விளக்கம்

தேனி:தேனி கொடுவிலார்பட்டி அருகே உள்ள நாகலாபுரம் தோட்டக்கலை கிராமத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. தோட்டக்கலை அலுவலர் நாகராஜன், மாவட்ட உதவி வேளாண்மை அலுவலர் ஜெயபிரகாஷ் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

மா அடர் நடவு, சொட்டுநீர்ப் பாசனம், நிலப்போர்வை போன்றவற்றிற்கு உள்ள மானியம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தனர்.

தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்த நான்காம் ஆண்டு மாணவிகள் கலைசெல்வி, கலைவாணி, கற்பகம், கயல்விழி, கீர்த்தனா, கிருத்திகா,நந்தினி, மகேஷ்வரி, நட்சத்திரா ஆகியோர் பங்கேற்றனர். மாணவிகள், விவசாயிகளுக்கு, இயற்கை உரம் அசோஸ் பைரில்லத்தின் பயன்பாடுகள் குறித்து விரிவாக எடுத்துக் கூறினர்

## திராட்சையில் ஏற்றுமதி ரகங்கள் சாகுபடி செய்வதில் விவசாயிகள்...ஆர்வம்

கம்பம்:தேனி மாவட்டத்தில், திராட்சை சாகுபடியில் புதிய புரட்சியை ஏற்படுத்தும் வகையில்,விவசாயிகள் ஏற்றுமதி ரகங்களை சாகுபடி செய்யத் துவங்கியுள்ளனர். சில்லரை விற்பனையில், கிலோவிற்கு 200 ரூபாய் வரை கிடைக்கும் திராட்சை ரகங்கள் சாகுபடியில் முக்கிய இடம் பிடிக்கின்றன. மத்திய அரசின் திராட்சை ஆராய்ச்சி மையம் மகாராஷ்டிராவிலும், மண்டல மையம் பெங்களூருவிலும் செயல்படுகிறது.தமிழகத்தில் திராட்சையின் தாயகமாக கம்பம் பள்ளத்தாக்கு விளங்குகிறது.

காமயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி உட்பட நூற்றுக்கணக்கான கிராமங்களில் திராட்சை முக்கிய பயிராக உள்ளது. எனவே தான், ஒயின் தொழிற்சாலை தமிழ்நாட்டில் முதன்முதலில் கம்பம் அருகே உள்ள ஆனைமலையன்பட்டியில் துவக்கப்பட்டது.தற்போது, திராட்சை ஆராய்ச்சி மையம், காமயகவுண்டன்பட்டி அருகே அமைக்கும் பணி துவங்கியுள்ளது. இப்பகுதியில் மஸ்கட், தாம்சன் சீட்லெஸ் உள்ளிட்ட சில ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இந்த ரகங்களை மழை மற்றும் பனிக் காலங்களில் நோய் தாக்கும். விலையும் கிடைக்காது. பழங்கள் உடைந்து போகும். எனவே விவசாயிகள் தற்போது ஏற்றுமதி ரகங்களை சாகுபடி செய்யத் துவங்கியுள்ளனர்.

குறிப்பாக, ரெட்குளோப், சரத் சீட்லெஸ் (கருப்பு) உள்ளிட்ட சில ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. சுருளிப்பட்டி மற்றும் காமயகவுண்டன்பட்டியில் சில விவசாயிகள் சாகுபடி செய்து விற்பனை செய்யத் துவங்கியுள்ளனர். இதில் ரெட் குளோப் சில்லரை விற்பனையில் 200 ரூபாய் வரை விலை கிடைக்கிறது. சத் சீட்லெஸ் (கருப்பு) இன்னும் மார்க்கெட்டிற்கு வரவில்லை. பழங்கள் பிளம்ஸ் பழம் அளவிற்கு சைஸ் உள்ளது. நல்ல கலராகவும் உள்ளது. தோல் கெட்டியாக இருப்பதால் எளிதில் கெட்டுப்போகாது. திராட்சை விவசாய சங்க பொருளாளர் இருளாண்டி கூறியதாவது : இந்த ரகங்களை ஒட்டுகட்டி சாகுபடி செய்கிறோம்.

உரம் மட்டும் 10 சதவீதம் கூடுதலாக தேவை. நோய் தாக்குதல் குறைவாக உள்ளது. மழை மற்றும் பனிக் காலங்களை தாக்குபிடிக்கிறது. நல்ல மகசூல் மற்றும் விலை கிடைக்கிறது.

சரத் சீட்லெஸ் சாகுபடி கொஞ்சம் சிக்கலாக உள்ளது. ரெட்குளோப் நன்றாக உள்ளது. சில்லரை விற்பனையில் ரெட் குளோப் தேங்கி நிற்கிறது, என்றார்.

## மாவட்டத்தில் மானாவாரியாக பயறு வகைகள் பயிரிடுவதில்... கோடை மழையும் ஏமாற்றியதால் பாதிப்புக்குள்ளான விவசாயிகள்

திண்டுக்கல்:திண்டுக்கல் மாவட்டத்தில் கோடைமழையும் ஏமாற்றியதால் மானாவாரி விவசாயம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆடிப்பட்டத்தில் விதைப்பு பணி மேற்கொள்ளவேண்டிய விவசாயிகள் மழையை எதிர்பார்த்து காத்துள்ளனர். மாவட்டத்தில் விவசாய பரப்பு 2 லட்சத்து 97500 ஏக்கர் பரப்பில் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. தென் மேற்கு பருவமழையை தொடர்ந்து வடகிழக்கு பருவமழையும் ஏமாற்றியதால் கடந்த ஆண்டில் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது.அடுத்த வரும் கோடைமழையாவது கைகொடுத்தால் மானாவாரிய பயிர்களை நடவு செய்யலாம், என்ற எண்ணத்தில் இருந்த விவசாயிகளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. நத்தம் பகுதியில் கோடைமழைக்கு, மானாவாரியாக தட்டப்பயறு, உளுந்து, பாசிப்பயறு உள்ளிட்ட பயறு வகைகளை 20 ஆயிரம் ஏக்கரில் பயிரிடுவது வழக்கம். இந்த ஆண்டு கோடை மழை ஏமாற்றியதால், பயறு வகைகள் பயிரிடுவதை விவசாயிகள் முற்றிலுமாக தவிர்த்துவிட்டனர். இதனால் மானாவாரி விவசாயம் கேள்விக்குறியாகியுள்ளது. இதேபோல் பழநி பகுதியில் மக்காச்சோளம், சோளம், உளுந்து வகைகள் மானவாரியாகவும், இறவை பாசனமாகவும் நடவு செய்யப்படும். கோடை மழை இல்லாததாலும், கிணற்றில் நீர்மட்டம் வெகுவாக குறைந்ததாலும் மானாவாரி விவசாயத்தை இப்பகுதி விவசாயிகளும் கைவிட்டு விட்டனர். ஜனவரி முதல்

ஜூலை வரை பெய்யவேண்டிய சராசரி மழை அளவு 262.7 மி.மீ. ஆனால் இதுவரை பெய்த மழை அளவு 119.1 மி.மீ., மட்டுமே. சராசரியில் பாதியளவு கூட மழை பெய்யவில்லை. ஜூலையில் மட்டும் பெய்யவேண்டிய மழை அளவு- 30.6 மி.மீ., ஆனால் இதுவரை பெய்த மழை அளவு- 3 மி.மீ., மட்டுமே.மாதம் முடிய ஒரு வாரம் மட்டுமே உள்ள நிலையில் மழை பெய்யும் அறிகுறியும் இல்லை. அவ்வப்போது தூறல் மட்டுமே வந்துவிட்டு செல்கிறது. ஆடிப்பட்டத்தில் தேடி விதைத்து வந்த விவசாயிகள், தற்போதுள்ள நிலையில் மழையை நம்பி பயிரிட்டால் கையில் இருக்கும் காசும் கரைந்துவிடும் என பயந்து விவசாயத்தை தவிர்த்து வருகின்றனர். கடந்த ஏழு மாதங்களில் 50 சதவீதத்திற்கு மேல் மழை பொழிவு குறைந்துள்ளது. மானாவாரி பயிர் முற்றிலுமாக மாவட்டத்தில் பயிரிடப்படாத நிலையில் இதன் பாதிப்பு பயறுவகைகள் விலை உயர்வில் தெரியவரும்.

## மழைநீர் சேமிப்பு விழிப்புணர்வு பேரணி

தூத்துக்குடி: காரப்பேட்டை நாடார் மேல்நிலைப்பள்ளியில் என்.எஸ்.எஸ்.மாணவர்களும், தேசிய பசுமைப்படை மாணவர்களும் இணைந்து மழைநீர் சேமிப்பு விழிப்புணர்வு பேரணியை நடத்தினர்.

பேரணியை காரப்பேட்டை நாடார் மகமைச் செயலர் விநாயகமூர்த்தி துவக்கி வைத்தார். பள்ளிச் செயலர் ரமேஷ் முன்னிலை வகித்தார். பேரணியில் மாணவர்கள் மழைநீர் சேமிப்பு குறித்த வாசகங்களை கையில் ஏந்தி மக்களுக்கு மழைநீர் சேமிப்பின் அவசியத்தை எடுத்துகூறினர். பேரணி தூத்துக்குடியின் முக்கிய வீதிகளான லயன்ஸ்டவுன், ஜார்ஜ்ரோடு, டபிள்யூ ஜி.சி.ரோடு வழியாக பழைய மாநகராட்சி மற்றும் தீயணைப்பு நிலையம் வழியாக பள்ளியை வந்தடைந்தது. பேரணியை என்.எஸ்.எஸ்.ஒருங்கிணைப்பாளர் முருகேசன் மற்றும்

தேசிய பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் பொன்னையா ஆகியோர் வழிநடத்திச் சென்றனர்.

### தக்காளி விலை சரிவு: மக்கள் மகிழ்ச்சி

ஓசூர்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கடந்த வாரங்களை விட தக்காளி விலை சரிவடைந்துள்ளால், நடுத்தர மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.
கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தோட்டக்கலை பழப்பயிர்களில் மாவுக்கு அடுத்தப்படியாக காய்கறி பயிர்களை விவசாயிகள் அதிகளவு சாகுபடி செய்துள்ளனர். மாவட்டத்தில், 9,077 ஹெக்டேர் நிலத்தில் காய்கறிகள் சாகுபடி செய்யப்படுகிறது.இவற்றில், 5,000 ஹெக்டேரில் சுழற்சி முறையில் தக்காளி ஆண்டு முழுவதும் உற்பத்தி செய்யப்படுகிறது. ஓசூர் அடுத்த தக்காளி விற்பனை செய்ய பத்தலப்பள்ளி, ராயக்கோட்டையில் தமிழகத்தில் மிகப்பெரிய தக்காளி சந்தைகள் செயல்படுகிறது.
இங்கு இருந்து கர்நாடகா, ஆந்திரா, கேரளா மற்றும் வட மாநிலங்களுக்கு தக்காளி ஏற்றுமதியாகிறது. அரேபியா நாடுகளில் தக்காளி ஜூஸ், ஜாஸ் உள்ளிட்ட பல்வேறு உணவு பொருட்கள் தயார் செய்ய கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்து தக்காளி ஏற்றுமதியாகிறது.கிருஷ்ணகிரி தக்காளிக்கு உள்நாட்டு, வெளிநாட்டு சந்தைகளில் ஆண்டு முழுவதும் நல்ல வரவேற்பு இருந்து வருகிறது. கடந்த இரு ஆண்டாக ஓசூர் தாலுகாவில் போதிய பருவமழை பெய்வில்லை.அதனால், விவசாய கிணறுகளில் நீர் மட்டம் பாதாளத்துக்கு சென்றது. நிலத்தடி நீர் மட்டமும் கடும் வீழ்ச்சியடைந்தது. அதனால், மாவட்டம் முழுவதும் பரவலாக தக்காளி உற்பத்தி குறைந்தது.கடந்த இரு மாதமாக மாவட்டம் முழுவதும் பரவலாக ஆலங்கட்டி மழை பெய்தது. இதனால், அறுவடை பருவத்துக்கு வந்த தக்காளி செடிகள், பழங்கள் நாசமடைந்தன. அதனால், கடந்த மூன்று மாதமாக பத்தலப்பள்ளி, ராயக்கோட்டை உள்ளிட்ட மாவட்டம் முழுவதும் உள்ள தக்காளி

சந்தைகளில் தக்காளி விலை "கிடுகிடு'வென உயர்ந்தது.

ஓசூர் தாலுகாவில் இருந்து தக்காளியும் வெளிமாநில விற்பனைக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதனால், மாவட்டத்தில் தக்காளிக்கு கடும் பற்றாக்குறை ஏற்பட்டு சந்தைகளில் விலை குறையாமல் இருந்த நிலை மாறி தற்போது, விலை குறைந்து வருவதால், கடந்த சில மாதங்களாக தக்காளி வாங்காமல் சமாளித்து வந்த பொதுமக்கள் தற்போது, தக்காளி வாங்க துவங்கியுள்ளனர்.வேளாண் துறை அதிகாரிகள் கூறியதாவது:கடந்த வாரம் வரை தக்காளி விலை உச்சத்தில் இருந்தது. கிலோ, 25 ரூபாய் முதல், 20 ரூபாய் வரை விற்பனையானது. தற்போது, சந்தைகளுக்கு தக்காளி வரத்து துவங்கியுள்ளதால், விலை கிலோ 15 ரூபாய்க்கு குறைந்துள்ளது. சில்லறை விற்பனை கடைகளில் மட்டும் விலை குறையவில்லை. இந்த விலையும் இன்னும் ஓரிரு வாரத்தில் குறைந்துவிடும். மேலும், தற்போது மழையும் ஒரளவு பெய்யதுவங்கியுள்ளதால் நிலத்தடி நீர் மட்டும் உயர்ந்துள்ளது.சந்தைகளில் தக்காளிக்கு நல்ல வரவேற்பு உள்ளதால் விவசாயிகள் மீண்டும் தக்காளி சாகுபடி செய்ய துவங்கியுள்ளதால், சந்தைகளுக்கு தக்காளி அதிகரிக்க வாய்ப்புள்ளது.இவ்வாறு கூறினார்.

## மஞ்சள், கடலைக்கு கூடுதல் விலைவிவசாயிகளுக்கு யோசனை

கோபிசெட்டிபாளையம்: மஞ்சள், நிலக்கடலையில் கூடுதல் விலை கிடைக்கும் வழிமுறைகள் குறித்து வேளாண் கருத்தரங்கில் யோசனைகள் தெரிவிக்கப்பட்டது. மஞ்சள் மற்றும் நிலக்கடலையில் கூடுதல் மகசூல் பெறும் வழிமுறைகள் குறித்து, நம்பியூரில் வேளாண்மை விற்பனை வாரியம் சார்பில் விவசாயிகள் கருத்தரங்கு நடந்தது.வேளாண் விற்பனைக்கூட கண்காணிப்பாளர் குணசேகர் வரவேற்றார். வேளாண் விற்பனை வாரிய உதவி இயக்குனர் அல்தாப் தலைமை வகித்து பேசியதாவது:

வேளாண்மையில் மஞ்சள் முக்கிய இடத்தை வகிக்கிறது. மஞ்சளில் சில தொழில்

நுட்பங்களை கடைபிடித்து, விவசாயிகள் கூடுதல் வருமானம் பெறமுடியும். மஞ்சள் அறுவடை செய்தபின், சுத்தம் செய்து சுத்தமான நீரில் சோடியம் கார்ப்பனேட் கரைசலை ஊற்றி, நன்கு வேக வைக்க வேண்டும்.அதனை, 15 நாட்களுக்கு உலர்த்தி நிறம் ஏற்றுவது அவசியம். 100 கிலோ மஞ்சளை நிறமேற்ற, 40 கிராம் படிகாரம், மஞ்சள் தூள், 2 கிலோ, ஆமணக்கு எண்ணெய், 140 கிராம், சோடியம் பைசல்பேட், 30 கிராம், ஹைட்ரோகுளோரிக் அமிலம், 30 மி.லி., சேர்த்து நிறம் ஏற்றவேண்டும்.சாணிப்பாலுக்கு பதிலாக ரசாயன முறையில் மஞ்சளை பக்குவப்படுத்துவதன் மூலம், கூடுதல் விலை பெறமுடியும்.நிலக்கடலை பயிருக்கு உரிய காலத்தில் ஜிப்சம் இடுவதன் மூலம், திரட்சியான காய்கள் கிடைத்து, கூடுதல் லாபம் கிடைக்கும், என்றார்.

தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் கணேசமூர்த்தி, வேளாண் துறை அலுவலர் மோகனசுந்தரம், தினேஷ் உள்பட பலர் பங்கேற்றனர்.

## குறுவை சாகுபடி நீர் ஒதுக்கீட்டில்கீழ்பவானி பாசன சங்கம் அதிருப்தி

ஈரோடு: குறுவை சாகுபடிக்கு நீர் ஒதுக்கீடு செய்யாமல், சம்பா பருவ சாகுபடிக்கான நீரை ஒதுக்கீடு செய்ததால், கீழ்பவானி பாசன சங்கத்தினர் அதிருப்தி தெரிவித்தனர்.

இதுகுறித்து கீழ்பவானி பாசன சங்க தலைவர் நல்லசாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:ஈரோடு மாவட்டம் கொடிவேரி அணைப்பாசனம் மூலம், 24,504 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. காவிரி இறுதி தீர்ப்பின்படி குறுவை சாகுபடிக்கு நீர் ஒதுக்கீடு செய்யாமல், சம்பாவுக்கு நீர் ஒதுக்கப்பட்டுள்ளது. பவானிசாகர் செயற்பொறியாளர் பரிந்துரையை மாவட்ட நிர்வாகமும், பொதுப்பணித்துறையும் ஏற்று, ஜூன், 28ம் தேதி கொடிவேரி பாசனத்துக்கு கீழ்பவானி அணை நீர் திறக்கப்பட்டுள்ளது. இது, காவிரி நதிநீர் தீர்ப்புக்கு புறம்பானது.கொடிவேரி பாசன பகுதியில் நெல் பயிரிட, வேளாண் துறை விதை நெல்லை கொடுத்துள்ளது.

அரசு துறைகளை நம்பி விவசாயிகளும் நெல் சாகுபடிக்கு தயாராகி வருகின்றனர். கொடிவேரி அணை பாசனப் பகுதியில் குறுவை பட்டத்தில் நெல் பயிரிட, 11.08 டி.எம்.சி., நீர் தேவை. அதேநேரத்தில், கொடிவேரி அணை பாசனங்களுக்கான மொத்த நீர் ஒதுக்கீடு, 4.65டி.எம்.சி., ஆகும். களை எடுப்புக்கு பின் பயிருக்கான தண்ணீர் இல்லாமல் போகும். கடந்த ஆண்டு டெல்டா மாவட்டங்களில் பரவலாக சம்பா பயிர் காய்ந்தது போன்ற அபாயம் தற்போது மீண்டும் ஏற்பட்டுள்ளது, என தெரிவித்துள்ளார்.

### மழை ஏமாற்றியதால் மன கவலையில் விவசாயிகள்

கோத்தகிரி:கோத்தகிரியில் பொய்த்துவரும் மழையால், பசுந்தேயிலை வரத்து குறைந்து வருகிறது.

மாவட்டத்தில் கூடலூர், ஊட்டி உள்ளிட்ட பல பகுதிகளில், மழை பெய்து வருகிறது. கோத்தகிரி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில், மழைப் பொய்த்துள்ளது.

தற்போது, பசுந்தேயிலைக்கு 18 ரூபாய் குறையாமல் விலை கிடைத்துவரும் நிலையில், கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக, தேயிலை தோட்டங்களில் மகசூல் குறைந்து வருகிறது.

இதனால், விவசாயிகளுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், கோத்தகிரி பகுதியில் உள்ள தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் பலர், குந்தா, ஊட்டி மற்றும் கூடலூர் பகுதியில் இருந்து, பசுந்தேயிலையை வாங்கி தொழிற்சாலைகளை இயக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் மழை வேண்டி பிரார்த்தனை செய்து வருகின்றனர்.

## சம்பா சாகுபடிக்கு மேட்டூர் அணை கைகொடுக்குமா? : காத்திருக்கும் மாவட்ட விவசாயிகள்

கரூர்: சம்பா சாகுபடிக்கு கரூர் மாவட்ட விவசாயிகள் தயராகும் நிலையில், மேட்டூர் அணையில் தண்ணீர் திறக்கப்படுமா? என்று, மாவட்ட விவசாயிகள் ஆவலோடு காத்திருக்கின்றனர்.மேட்டூர் அணை மூலம் சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சி, தஞ்சை, திருவாரூர், புதுக்கோட்டை, நாகை, கடலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில், 16.5 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. கடந்தாண்டு பருவமழை பொய்த்து போனதாலும், கர்நாடகம் காவிரியில் தண்ணீர் திறந்து விடாமல் வஞ்சித்ததால், மேட்டூர் அணையில், 25 அடிக்கு குறைவாக தண்ணீர் இருப்பு இருந்தது.இதனால் குறுவை, சம்பா சாகுபடி பாதிக்கப்பட்டது. இதேபோல் இந்தாண்டு குறுவை சாகுபடி முற்றிலும் முடங்கி போய் விட்டது. இந்த சூழ்நிலையில், தற்போது கர்நாடகத்தில் காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்து வருவதால், அணைகளிருந்து உபரிநீர் திறந்து விடப்படுகிறது. தற்போது, மேட்டூர் அணையின் நீர்மட்டம், கிடுகிடுவென, 75 அடியாக உயர்ந்து வருகிறது.வடக்கு கிழக்கு பருவமழை மற்றும் மேட்டூர் அணை கைகொடுக்கும் என்ற நம்பிக்கையில், டெல்டா விவசாயிகள் சம்பா சாகுபடிக்கு தயாராகி வருகின்றனர்.கரூர் மாவட்டத்தில் காவிரி, அமராவதி ஆற்று பாசன மூலம், 15 ஆயிரத்து, 816 ஹெக்டேர் நிலப்பரப்பில் சாகுபடி நடந்து வருகிறது. இதில் கிருஷ்ணராயபுரம், மாயனூர், லாலாப்பேட்டை, குளித்தலை, தோகைமலை, மணல்வாடி, மகதானபுரம், சித்தலவாடி ஆகிய பகுதிகளில், காவிரி பாசனம் மூலம் நெல் சாகுபடி செய்யப்படுகிறது.இதில் குறுவை சாகுபடி, 100 ஹெக்டேர் என்ற குறைந்த அளவில் செய்யப்படுகிறது. இதுகூட, இந்தாண்டு நடக்கவில்லை. ஆனால் சம்பா, 10 ஆயிரத்து, 800 ஹெக்டேர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு வந்தது. கடந்த ஆண்டு நிலத்தடி நீர் பாசனத்தை நம்பி, 7 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. இதில், 12 டன் மட்டுமே நெல் அறுவடை

செய்யப்பட்டது.

இதுகுறித்து வேளாண் அதிகாரி ஒருவர் கூறியதாவது:மேட்டூர் அணையில் நீர்மட்டம் உயர்ந்து வருவதால், சம்பா சாகுபடிக்கு விவசாயிகள் சுறுசுறுப்பாக தயாராகி வருகின்றனர். ஆகஸ்ட் மாதம் துவங்கி, டிசம்பர் மாதம் வரை, சம்பா சாகுபடி நடப்பது வழக்கம். கரூரில் மாவட்டத்தில் உள்ள, எட்டு வேளாண் விரிவாக்க மையங்களில், 160 டன் விதை நெல் கையிருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதில் விவசாயிகள் பெரும்பாலும் பி.பி.டி., ரகம் நெல்லை பயிரிடுகின்றனர்.இதுமட்டுமல்லாமல் ஒரு கிலோ விலை நெல்லுக்கு, ஐந்து ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. இதற்கு உதவி வேளாண் அலுவலர் சான்று பெறுவது அவசியமாகும். கரூர் மாவட்டத்துக்குரிய உர ஒதுக்கீடு போதுமான அளவு கேட்டு பெறப்பட்டு வருகிறது. யூரியா, சூப்பர் பாஸ்பேட் போன்ற உரங்கள் தனியார் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில், போதுமான அளவு கையிருப்பு வைக்கப்பட்டுள்ளது.உரம் வாங்கும் விவசாயிகள், உரிய பில்லையும் கேட்டு பெறவேண்டும். அதிக விலைக்கு உரங்கள் விற்றால், உரக் கட்டுப்பாட்டு சட்டத்தின்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும். உர விற்பனை நிலையத்தில் தெளிவான தகவல் பலகை, விலைப்பட்டியல் போன்றவை இருக்க வேண்டும்.தற்போது விவசாயிகள் பசுதாள் உரங்களை ஈட்டு, நிலங்களை தயார் செய்தால், அதிக மகசூல் பெறமுடியும். நடப்பு ஆண்டு மாவட்டத்தில், 8,000 ஹெக்டேர் நிலப்பரப்பில் திருந்தி நெல் சாகுபடி தொழில் நுட்பத்தை பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் கூடுதல் மகசூலை விவசாயிகள் பெறமுடியும்.இவ்வாறு அவர் கூறினார்.

### நரப்பாக்கத்தில் கருகும் நெற்பயிர்கள் கிணற்று பாசன விவசாயிகள் கவலை

காஞ்சிபுரம்:நரப்பாக்கத்தில், கதிர் விடும் நேரத்தில் தண்ணீர் இன்றி, 50 ஏக்கர் நெற்பயிர்கள் கருகிப் போனதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

காஞ்சிபுரம் அடுத்துள்ளது நரப்பாக்கம் கிராமம். இங்கு, பம்பு செட் வைத்திருக்கும் விவசாயிகள், கடந்த சொர்ணவாரி பட்டத்தில், "ஏடிடி 43' ரக நெற்பயிரை நடவு செய்தனர். இவை, இம்மாதம் முதல் வாரத்தில் கதிர் விட்டது.

பதரான நெல்மணிகள் ஆனால், நரப்பாக்கம், மேட்டுப்பாளையம், ஆளவந்தார்மேடு மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள பாசன கிணறுகள், நிலத்தடி நீர் மட்டம் குறைந்ததால், திடீரென வறண்டு போயின. இதனால், பாசனமின்றி நெற்பயிர்கள் கருகி, கதிர்கள் "பதராக' போனது. மாற்று ஏற்பாடு செய்ய முடியாமல், விவசாயிகள் தவித்தனர். இதனால், பயிர்களை மாடுகள் மேய்ந்து வருகின்றன.

இதுகுறித்து, நரப்பாக்கத்தைச் சேர்ந்த விவசாயி முருகன் கூறியதாவது:

கிணற்று பாசனத்தை நம்பி, ஒன்பது ஏக்கர் பரப்பளவில், சொர்ணவாரி பட்டத்தில் நெற்பயிரை நடவு செய்தேன். நட்ட 62வது நாளில், நான்கு பானக் கிணறுகளும் வறண்டு போனது. இன்னும் ஒரு மாதம் வரை தண்ணீர் இருந்திருந்தால், மகசூல் கிடைத்திருக்கும்.  பக்கத்து கிணற்றில் இருந்து கூட தண்ணீரை "பணம்' கொடுத்து பாய்ச்ச முடியாத அளவிற்கு, அனைத்து கிணறுகளும் ஒரே நேரத்தில் வறண்டுபோனது. இதனால், ஒவ்வொரு ஏக்கருக்கும், 35 ஆயிரம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. 50 ஏக்கர் பாதிப்பு எங்கள் கிராமத்தில் மட்டும், கிணற்று தண்ணீரை நம்பி பயிரிடப்பட்ட 50 ஏக்கர் நெற்பயிர்கள், கருகி போயின. இந்த பயிர்களை மாடுகள் மேய்ந்து வருகின்றன. பாதிக்கப்பட்ட எங்களுக்கு அரசு சார்பில் உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என, காஞ்சிபுரம் மாவட்ட நிர்வாகத்திற்கு, புகார் மனுக்கள் கொடுத்து உள்ளோம். ஆனால், இதுவரை, எவ்வித நடவடிக்கையும் இல்லை. வேளாண்மை துறை அதிகாரிகள் நேரில் பார்வையிட்டு, தங்களுக்கு உரிய நிவாரணம் பெற்றுத்தர வேண்டும். இவ்வாறு, அவர் கூறினார்.

## வாழை சாகுபடியில் நல்ல லாபம்: திம்மாவரம் விவசாயிகள் ஆர்வம்

திம்மாவரம்:காட்டாகொளத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட திம்மாவரம் ஊராட்சியில், விவசாயம் அதிகளவில் மேற்கொள்ளப்படுகிறது. இங்குள்ள விவசாயிகள், காய்கறி பயிர்களுடன் தற்போது, குறைந்த செலவில் அதிக லாபம் தரும், வாழை சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இலைகளாலும் லாபம்

இதுகுறித்து, அப்பகுதி விவசாயி மனோகரன் கூறியதாவது:

எனக்கு சொந்தமான, 2.88 ஏக்கர் நிலத்தில், கற்பூர வாழை சாகுபடி செய்துள்ளேன். இதற்காக, முதற்கட்டமாக, ஏக்கருக்கு, 5,000 ரூபாய் செலவில், தொழுஉரம் மற்றும் ரசாயன உரங்களை நிலத்தில் கொட்டி, நன்கு உழுது பக்குவபடுத்தினேன்.

பின்னர், ஒரு வாழைக் கன்று, 15 ரூபாய் வீதம், 24 ஆயிரம் ரூபாய் செலவில், 1,600 வாழைக் கன்றுகளை வாங்கி நடவு செய்துள்ளேன்.

இவைகள் தற்போது, சிறப்பாக வளர்ந்து வருகின்றன. 10 மாதங்கள் வரை, பக்கவாட்டில் வளரும் கன்றுகளின் இலைகளை அறுவடை செய்து, விற்பனை செய்யலாம்.  மாதம் ஒருமுறை, களை எடுத்து, தேவையான நீர் பாசனம் அளிக்க வேண்டும். களை மற்றும் உரச்செலவு என, ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் வரை செலவாகும். வாழை மரங்கள், 12 மாதங்களுக்கு பிறகு, குலை தள்ளும்.

ஏக்கருக்கு ரூ.75 ஆயிரம் ஒரு வாழை குலையில், 15 முதல் 17 சீப்புகள் வரை கிடைக்கும். ஒரு வாழை குலை, 200 முதல் 250 ரூபாய் வரை விற்பனையாகும். அனைத்து செலவுகளும் போக, ஏக்கருக்கு, 75 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்கும்.  நீர் பாசனத்திற்கு, சொட்டு நீர் பாசன கருவிகளை, மானிய விலையில் பெற்று, பொருத்தி உள்ளதால், குறைந்த நீர் பாசனம் மற்றும் குறைந்த செலவில், அதிக லாபம் பெற முடியும். இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

## மழைநீர் சேகரிப்பு திட்டத்தை உயிர்ப்பிக்க...அறிவுறுத்தல்! நிலத்தடி நீர் மட்டத்தை அதிகரிக்க ஏற்பாடு

அனைத்து உள்ளாட்சிகளும், அதளபாதாளத்திற்கு சென்றுள்ள, நிலத்தடி நீர் மட்டத்தை அதிகரிக்கும் வகையில், மழைநீர் திட்ட கட்டமைப்புகளை புனரமைக்க வேண்டும் என, அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில், 2001ல், மழைநீர் சேகரிப்பு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அனைத்து கட்டமைப்புகளிலும், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும் என, சட்டம் இயற்றப்பட்டன. அரசு அலுவலகங்கள் உள்ளிட்ட அனைத்து கட்டடங்களிலும், அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

நிபந்தனை விதிப்பு

மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு இல்லாத கட்டடங்களுக்கு, மின் இணைப்பு, குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படும் என, எச்சரிக்கை விடப்பட்டது. புதிதாக கட்டப்படும் கட்டடங்களில், மழைநீர் சேகரிப்பு அமைப்பு இருந்தால் மட்டுமே, பணி நிறைவு சான்றிதழ் வழங்கப்படும் என, நிபந்தனை விதிக்கப்பட்டது.

இதனால், மழைநீர் கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டன. அதன் மூலம், மழைநீர் சேகரமாகி, நிலத்தடி நீர் மட்டம், கோடைக் காலங்களிலும் சிறப்பாக இருந்தது.

இந்நிலையில், ஆட்சி மாற்றம் ஏற்பட்டதால், மழைநீர் சேகரிப்பு திட்டம் கிடப்பில் போடப்பட்டது. அரசு கண்டு கொள்ளாததால், உள்ளாட்சி அமைப்புகள், மழைநீர் சேகரிப்பு விஷயத்தில் அலட்சியம் காட்ட துவங்கின.

இதனால், நிலத்தடி நீர் மட்டமும் பாதிக்க துவங்கியது. கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததால், நீர் ஆதாரங்களான ஏரி, குளங்கள் வறண்டுவிட்டன. கடும் வறட்சியின் காரணமாக, மாவட்டத்தில், நிலத்தடி நீர் மட்டம், 400 அடிக்கும் கீழே சென்றுவிட்டது.

மிகவும் ஆழத்தில் உள்ள நீரை, மிகவும் திறன் கொண்ட மின்மோட்டர்களை கொண்டு இறைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. மின்தடை அதிகமாக

இருந்ததால், மின்மோட்டர்களை இயக்குவதில், சிரமம் ஏற்பட்டு, கடுமையான தண்ணீர் பற்றாக்குறை நிலவுகிறது.

புனரமைக்க முடிவு

இதை சமாளிக்கும் வகையில், சிதிலமடைந்து உள்ள மழைநீர் கட்டமைப்புக்களை புனரமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. பயன்படாத ஆழ்துளை கிணறுகளுக்கு அருகில், மழைநீர் தேங்கும் விதமாக, குழிகளை ஏற்படுத்தவும், அதில் சேகரமாகும் நீரை, ஆழ்துளை கிணறுகள் வழியாக நிலத்திற்கு அனுப்பவும், தேவையான ஏற்பாடுகளை செய்யுமாறு, உள்ளாட்சிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து, பெயர் வெளியிட விரும்பாத மாவட்ட ஊராட்சிகளின் உதவி இயக்குனரின் அலுவலர் ஒருவர் கூறியதாவது:

மாவட்டத்தில் உள்ள, 14 ஒன்றியங்களில், 4,700 ஆழ்துளை கிணறுகளும், 7,100 கைப்பம்புகளும் உள்ளன. இதில், 20 சதவீதம் அளவிற்கு ஆழ்துளை கிணறுகள் மற்றும் கைப்பம்புகள் பழுதடைந்தும், தண்ணீரின்றி பயன்படுத்தாத நிலையில் உள்ளன. கடந்த, ஜனவரி மாதம் நடந்த அதிகாரிகள் கூட்டத்தில், முதல்வர் பயனற்ற மற்றும் பழுதடைந்த ஆழ்துளை கிணறுகளில், மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்க வேண்டும் என, உத்தரவிட்டார்.

கடிதம் இதையடுத்து, மூன்று மாதங்களுக்கு முன், அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்களை அழைத்து, கூட்டம் போட்டு அனைத்து ஊராட்சிகளிலும் இத்திட்டம் செயல்படுத்த வேண்டும் என, கூறியும், ஒவ்வொரு ஒன்றியத்திற்கு கடிதமும் அனுப்பப்பட்டு உள்ளது. இந்த மழைநீர் சேகரிப்பு தொட்டிகளை அமைப்பதற்கு, அந்தந்த ஊராட்சி நிர்வாகம் தான் முழுபொறுப்பு. மேலும், அதற்கான செலவுகளையும் ஊராட்சி பொது நிதியில் இருந்து, தொகை எடுத்துக் கொள்ளலாம். தற்போது, 14 ஒன்றியத்திலும், 500க்கும் குறைவான இடங்களில் தான், மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. நான்கு ஊராட்சிகள் தான், ஓரளவுக்கு இத்திட்டம் செயல்படுத்தி வருகிறது. மற்ற ஊராட்சிகளிலும்

இதை செயல்படுத்த வேண்டும் என, அறிவுறுத்தி வருகிறோம். விரைவில், இத்திட்டம் அனைத்து ஊராட்சிகளிலும் கண்டிப்பாக ஏற்படுத்தப்படும். இவ்வாறு, அவர் கூறினார்.

### உளுந்து விதைப்பு பணிகள் தீவிரம்

மயிலம்:மயிலம் பகுதியில் ஆடிப்பட்ட மானாவாரி மணிலா, உளுந்து விதைப்பு பணிகளில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மயிலம் பகுதியில் சுமார் 20 ஆயிரம் ஏக்கர் மானவாரி நிலங்கள் உள்ளன. மயிலம் பகுதி கிராமங்களில் தற்போது பெய்த மழையால் நிலங்கள் ஈரமாகியது. சில தினங்களாக விவசாயிகள், நிலத்தை உழுது பண்படுத்தி வந்தனர். ஆடி மாதத்தில் விதைப்பு பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு விவசாயிகள் கம்பு பயிரிட்டனர்.

கம்பு கதிர் முற்றியவுடன் குருவிகள் தொல்லையும், அறுவடைக்கு பணியாளகள் சரியாக கிடைப்பதில்லை. இதனால் இப்பகுதி விவசாயிகள் மணிலா, உளுந்து பயிரிட ஆர்வம் கொண்டுள்ளனர்.

இதற்கான விதைகள் மயிலம் வேளாண் விற்பனை மையத்தில் இருப்புகள் உள்ளது. விதை வாங்கும் விவசாயிகள் சிட்டா அடங்கல் எடுத்து சென்று மானியத்தில் விதைகளை பெற்றுச் செல்லலாம்.

### விதை நெல் மானியத்தில் விற்பனை

ராசிபுரம்: "ராசிபுரம் வேளாண் விரிவாக்க மையத்தில், விதை நெல், மானியத்தில் வழங்கப்படுகிறது' என, வேளாண் உதவி இயக்குனர் வரதராஜு தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை:ராசிபுரம் வட்டாரத்தில், விதை நெல், மானியத்தில் வினியோகம் செய்யப்படுகிறது. தற்போது, பொன்னி, ஏ.டி.டி., மற்றும் ராகி ஜி.பி.யு., 28 ஆகிய விதைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. நெல் மற்றும் ராகி

விதைகள் விதை கிராம திட்டத்தில், 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது. ஆர்வம் உள்ள விவசாயிகள், ராசிபுரம் வேளாண் விரிவாக்க மையத்தை தொடர்பு கொண்டு, விதைகளை பெற்றுக் கொள்ளலாம்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மத்திய அரசின் பருத்தி வங்கி திட்டம் உயிர் பெறாததால் ஜவுளி தொழில் முடக்கம்

ஈரோடு: மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட, பருத்தி மற்றும் நூலிழை வங்கி அமைக்கும் திட்டம், கிடப்பில் போடப்பட்டுள்ளதால், பருத்தி உற்பத்தியாளர்கள் அதிருப்தியில் உள்ளனர்.சீனா :உலக அளவில், ஜவுளி தொழிலில், சீனா முதலிடத்தில் உள்ளது. இத்துறையில், சீனாவுக்கு போட்டியாகவும், இணையாகவும், இந்தியா விளங்குகிறது.

சில ஆண்டுகளாக, மத்திய அரசின் நிலையற்ற கொள்கையால், ஜவுளித்தொழில் வளர்ச்சி மந்தமடைந்துள்ளது. இதனால், லட்சக்கணக்கான தொழிலாளர்கள் மாற்றுத் தொழிலுக்கு மாறி வருகின்றனர். இதே நிலை நீடித்தால், ஜவுளித் தொழிலில், வங்கதேசம் போன்ற சிறிய நாடுகள் கூட, இந்தியாவை விஞ்சும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்ட தொழில், வணிக சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் சிவநேசன் கூறியதாவது:மத்திய அரசின் தவறான புள்ளி விவரங்கள், கொள்கை, வழிகாட்டுதலால், பருத்தியின் விலை தாறுமாறாக உயர்ந்து உள்ளது.இந்தியாவில், 380 லட்சம் பருத்தி பொதிகள் உற்பத்தியாகின்றன. இவற்றை, பதுக்கல்காரர்களும், தொழிலுக்கு சம்பந்தம் இல்லாதவர்களும், ஊகவணிகம் மூலம் வாங்கி, அதிக விலைக்கு விற்கின்றனர். இதனால், உண்மையான நூற்பாலைகளுக்கு, பருத்தி கிடைப்பது இல்லை.அடக்க விலை:ஏற்றுமதி துறையில், ஆறு மாதத்துக்கு முன் கொடுத்த தயாரிப்பு விலையில், 35 முதல், 60 சதவீதம் வரை, அடக்க விலை உயர்ந்ததால், ஏற்றுமதியாளர்கள்

நஷ்டமடைந்தனர்.

ஜவுளித் தொழிலில், சீனாவுக்கு போட்டியாக திகழ்ந்த, இந்தியாவுக்கு, தற்போது, வங்கதேசம், கம்போடியா, வியட்நாம் போன்ற சிறிய நாடுகள் கூட சவாலாக உள்ளன. எனவே, பருத்தியை அரசே கொள்முதல் செய்து, பஞ்சாலைகளுக்கு தர வேண்டும். நூலிழை விலையை அரசே, நிர்ணயம் செய்ய வேண்டும். பருத்தி, நூலிழைக்கு, ஆறு மாதத்துக்கு நிலையான விலையை மத்திய, மாநில அரசு நிர்ணயிக்க வேண்டும்.

ஊக வணிகத்தில் இருந்து, பருத்தியும், நூலிழையும் நீக்கப்படப்பட வேண்டும். சாயக்கழிவு நீர் சுத்திகரிப்பு, கடலில் கலத்தல் ஆகிய திட்டத்தை அரசு மேற்கொள்ள வேண்டும். காஞ்சிபுரம்:தமிழகத்தில், ராஜபாளையம், ஈரோடு, மதுரை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில், பருத்தி நூலிழையை இருப்பு வைத்து, உரிய விலை கிடைக்கும் போது, அவற்றை விற்பனை செய்ய ஏதுவாக, பருத்தி, நூலிழை வங்கி அமைக்கப்படும் என, மத்திய அரசு அறிவித்தது.ஆனால், இன்றளவும் இத்திட்டம் கிடப்பில் தான் உள்ளது. நூலிழை, பருத்தி வங்கியை உடனடியாக அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு, அவர் கூறினார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**23.07.2013**

## தமிழகத்துக்கு தண்ணீர் திறப்பு கே.ஆர்.எஸ், கபினி, ஹாரங்கி அணைகள் முழுமையாக நிரம்பின



பெங்களூர்: கர்நாடக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் கனமழை பெய்து வருவதால், கே.ஆர்.எஸ். கபினி, ஹாரங்கி அணைகள் முழுமையாக நிரம்பியது. அணையில் இருந்து தமிழகத்திற்கு 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.கடந்த மூன்றாண்டுகளாக கர்நாடக மாநில காவிரி டெல்டா பகுதியில் இருக்கும் கே.ஆர்.எஸ். அணை உள்பட நான்கு அணைகளும் ஆகஸ்ட் கடைசி வாரத்தில் நிரம்பி வந்தது. அணைகள் தாமதமாக நிரம்பியதால், வேளாண் தொழில் வெகுவாக பாதிக்கப்பட்டது.

இவ்வாண்டும் அதே சோதனை வருமோ என்ற கவலை விவசாயிகள் மத்தியில் இருந்தது. கர்நாடகம் மட்டுமில்லாமல், கேரள மாநிலத்திலும் நல்ல மழை பெய்ததின் காரணமாக அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்தது. இம்மாதம் இறுதியில் நான்கு அணைகளும் நிரம்பும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 10

நாட்கள் முன்பாகவே அணைகள் நிரம்பியது.காவிரி டெல்டா பகுதியில் நல்ல மழை பெய்து வருவதால், நேற்று மாலை நிலவரப்படி 124.80 அடி உயரம் கொண்ட கே.ஆர். எஸ். அணையில் 122.90 அடி தண்ணீர் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 40 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டுள்ளது.

இன்று காலைக்குள் அணை முழுமையாக நிரம்பிவிடும். அதை தொடர்ந்து அணையில் இருந்து தண்ணீர் திறப்பது குறித்து முடிவு செய்யப்படும் என்று கே.ஆர்.எஸ். அணை முதன்மை நீர்பாசன பொறியாளர் விஜயகுமார் தெரிவித்துள்ளார். மொத் தம் 2 ஆயிரத்து 284 அடி உயரமுள்ள கபினி அணை யில் நேற்று மாலை நிலவரப்படி 2 ஆயிரத்து 281.75 அடி தண்ணீர் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 30 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டுள்ளது. அணையில் இருந்து வினாடிக்கு 33 ஆயிரம் கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. ஹாரங்கி அணையில் 2,857.64 அடி தண்ணீர் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 30 ஆயிரத்து 326 கன அடி தண்ணீர் வந்து கொ ண்டுள்ளது. வினாடிக்கு 28 ஆயிரத்து 546 கன அடி திறக்கப்பட்டுள்ளது.

### நீர்வரத்து 30 ஆயிரம் கனஅடியை தாண்டியது மேட்டூர் அணை நீர்மட்டம் 80 அடி ஆகஸ்ட் முதல் வாரம் நீர் திறப்பு?



மேட்டூர்: கர்நாடக மாநிலத்தில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த ஒரு மாதமாக கனமழை பெய்து வருகிறது. இதனால், அங்குள்ள கபினி அணை நிரம்பி உள்ள நிலையில், கிருஷ்ணராஜசாகர் அணையும் நிரம்பும் நிலையில் உள்ளது. இரு அணைகளிலும் இருந்து உபரி நீர் திறக்கப்பட்டுள்ளதால் மேட்டூர் அணைக்கு கடந்த 25ம் தேதியில் இருந்து நீர் வந்து கொண்டிருக்கிறது. நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த கனமழையால் கபினி அணைக்கு தற்போது 40 ஆயிரம் கனஅடி நீர் வருகிறது. இந்த நீர் முழுமையாக காவிரியில் திறக்கப்பட்டுள்ளது.கபினியில் திறக்கப்பட்ட உபரி நீர் நேற்று முன்தினம் இரவு மேட்டூர் அணையை வந்தடைந்தது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி மேட்டூர் அணைக்கு விநாடிக்கு 30,289 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 3796 கனஅடி நீர் திறக்கப்படுகிறது.மேட்டூர் அணையின் நீர்மட்டம் 79.10 அடியாகவும், நீர் இருப்பு 41.06 டிஎம்சியாகவும் உள்ளது.

பல மாதங்களுக்கு பின்னர் நீர்மட்டம் 80 அடியை நெருங்கியுள்ளது. 24 மணி நேரத்தில் நீர்மட்டம் 2.35 அடி உயர்ந்துள்ளது.உபரி நீர் திறப்பு காரணமாக கடந்த மாதம் 25ம் தேதி முதல் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிக்கத் தொடங்கியது. அப்போது, நீர்மட்டம் 15.51 அடியாக இருந்தது. கடந்த 27 நாட்களில் மேட்டூர் அணையின் நீர் மட்டம் 63.69 அடி உயர்ந்துள்ளது.நீர்வரத்து இதே அளவிற்கு நீடித்தால் அடுத்த இரு வாரங்களில் அணை யின் நீர்மட்டம் 100 அடியை தாண்டி விடும். இதனால், ஆகஸ்ட் முதல் வாரத்தில் மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்க வாய்ப்பு உள்ளதாக பொதுப்பணித்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.தமிழக எல்லையில் உள்ள பிலிகுண்டுலு காவிரி ஆற்றில் நேற்று காலை நிலவரப்படி வினாடிக்கு 40,000 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நண்பகல் நேரத்தில் வினாடிக்கு 32,000 கனஅடியாக

சரிந்தது.இந்நிலையில், நேற்றும் ஒகேனக்கல் அருவியில் குளிக்கவும், காவிரி ஆற்றில் பரிசலில் செல்லவும் தடை நீடித்தது.

**கிருஷ்ணா நீர் வரத்து எதிரொலி பூண்டி ஏரியில் இருந்து புழலுக்கு தண்ணீர் திறப்பு**



சென்னை: கண்டலேறு அணையில் இருந்து மீண்டும் கிருஷ்ணா நீர் திறக்கப்பட்டுள்ளதால் பூண்டி ஏரியில் இருந்து புழல் ஏரிக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து ஜூலை 1ம் தேதி வினாடிக்கு 200 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு, 500 கன அடியாக உயர்த்தப்பட்டது. இது, தமிழக எல்லையான ஜீரோ பாயின்ட்டுக்கு கடந்த 6ம்தேதி பிற்பகல் வந்தது. முன்னதாக 5ம்தேதி இரவு உப்பளமடுகு பகுதியில் இணை கால்வாய் உடைந்ததால் தண்ணீர் நிறுத்தப்பட்டது.பின்னர், கால்வாய் சீரமைக்கப்பட்டு கடந்த 6ம்தேதி பிற்பகலுக்கு மேல் மீண்டும் தண்ணீர் திறக்கப்பட்டது. கடந்த 12ம் தேதி உப்பளமடுகு பகுதியில் ஏற்கனவே உடைந்த பகுதிக்கு அருகில் மீண்டும் கால்வாயில் உடைந்தது.

இணை கால்வாயின் தரையில் 25 மீட்டர் தூரத்துக்கு சேதமடைந்தது. கால்வாய் சீரமைக்கப்பட்டு கடந்த 17ம்தேதி காலை கண்டலேறு அணையில் இருந்து மீண்டும் 300 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது.21ம் தேதி அதிகாலை 2

மணிக்கு தமிழக எல்லையான ஜீரோ பாய்ன்ட்டுக்கு வந்த தண்ணீர், நேற்று காலை பூண்டி ஏரியை வந்தடையும் என எதிர்ப்பார்க்கப்பட்டது. ஆனால், கால்வாயில் மழை நீர் தேங்கி நின்றதால், நேற்று முன்தினம் இரவே தண்ணீர் வந்தடைந்தது. இதுகுறித்து பொதுப்பணித்துறை அதிகாரி கூறுகையில், பூண்டி ஏரிக்கு தற்போது வினாடிக்கு 99 கன அடியாக கிருஷ்ணாநீர் வந்து கொண்டிருக்கிறது. பூண்டி ஏரியின் தண்ணீர் இருப்பு 135 மி.கன அடியாக உள்ளது. பூண்டியில் இருந்து புழல் ஏரிக்கு இணைப்பு கால்வாய் வழியாக வினாடிக்கு 91 கன அடி, பேபி கால்வாய் வழியாக 10 கன அடி என 101 கன அடி தண்ணீர் புழல் ஏரிக்கு அனுப்பப்படுகிறது' என்றார்.

**கடந்த ஆண்டில் இதுவரை இல்லாத அளவுக்கு பருப்பு உற்பத்தி அதிகரிப்பு**



புதுடெல்லி: பருப்பு வகைகள் உற்பத்தி இது வரை இல்லாத அளவுக்கு கடந்த 2012-13ம் ஆண்டில் 1.84 கோடி டன்னாக அதிகரித்துள்ளது. இது குறித்து, மத்திய அரசு வெளியிட்ட புள்ளி விவரம் வருமாறு: கடந்த 2012-13ம் ஆண்டில் பருப்பு வகைகள் உற்பத்தி இது வரை இல்லாத அளவாக 1.84 கோடி டன்னாக அதிகரித்துள்ளது. இதில், கடலைப்பருப்பு 88 லட்சம் டன் உற்பத்தியாகியுள்ளது. முந்தைய ஆண்டில் இது 77 லட்சம் டன்னாக இருந்தது. கடந்த ஆண்டில் துவரம்பருப்பு 30.7 லட்சம் டன் உற்பத்தியாகியுள்ளது. முந்தைய ஆண்டில் இது 30.9 லட்சம் டன் உற்பத்தியாகி இருந்தது.கடந்த ஆண்டில் உளுந்தம்பருப்பு உற்பத்தி, இது வரை இல்லாத அளவாக 19 லட்சம் டன்னை எட்டியுள்ளது. 2011-

12ம் ஆண்டில் இது 17.7 லட்சம் டன் உற்பத்தியாகி இருந்தது.

அதே சமயம், பாசிப்பருப்பு உற்பத்தி கடந்த ஆண்டில் குறைந்துள்ளது. 2011&12ம் ஆண்டில் 16.3 லட்சம் டன்னாக இருந்த உற்பத்தி, 2012-13ம் ஆண்டில் 12 லட்சம் டன்னாக சரிந்துள்ளது. ஒட்டுமொத்த உணவு தானியங்கள் உற்பத்தி 2011-12ம் ஆண்டில் 25.92 கோடி டன்னாக இருந்தது. இது கடந்த ஆண்டில் சிறிது குறைந்து 25.53 கோடியாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. மகாராஷ்டிரா, கர்நாடகா, ராஜஸ்தான் மாநிலங்களில் கடந்த ஆண்டில் பருவமழை குறைந்ததால் உற்பத்தி சரிந்துள்ளது. கோதுமை உற்பத்தி 2.55 சதவீதம் சரிந்துள்ளது. 9.48 கோடி டன்னில் இருந்து 9.24 கோடி டன்னாக சரிந்துள்ளது. பருத்தி உற்பத்தியும் 3.52 கோடி பொதிகளில் இருந்து 3.4 கோடி பொதிகளாக குறைந்துள்ளது. ஒரு பொதி என்பது 170 கிலோ ஆகும்.

**உள்நாட்டில் விலை உயர்வு எதிரொலி வெங்காயம் ஏற்றுமதிக்கு தடை**



புதுடெல்லி : நாடு முழுவதும் வெங்காயம் விலை ஏறி வரும் நிலையில், அதை ஏற்றுமதி செய்வதற்கு தடை விதிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
அன்றாட சமையலில் முக்கிய இடம் பிடித்துள்ளது வெங்காயம். இது இல்லாமல், இந்திய குடும்பங்களில் சமையலே செய்ய முடியாது. ஆனால், தற்போது வெங்காயத்தின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. சில்லரை மார்க்கெட்டுகளில்

ஒரு கிலோ வெங்காயம் ரூ.40 வரை விற்பனையாகிறது.

வெங்காயம் விலை உயர்வுக்கு முக்கிய கார ணம், அதை அதிகம் உற்பத்தி செய்யும் மகாராஷ்டிராவில் கனமழை பெய்து வருவதுதான். இதனால், ஆசியாவிலேயே மிகப்பெரிய வெங்காய சந்தையான லசல்கானில் ஒரு கிலோ ரூ.25க்கு விற்கப்படுகிறது. இங்கிருந்து பல கைகள் மாறி, சில்லரை மார்க்கெட்டுக்கு வரும்போது அதன் விலை மேலும் ரூ.15 வரை கூடி விடுகிறது.

மகாராஷ்டிராவுக்கு அடுத்தபடியாக, ஆந்திரா, கர்நாடகா, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் வெங்காயம் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால், இங்கும் மழை பெய்து வருவதால் உற்பத்தி பாதித்துள்ளது. மேலும், உற்பத்தியாகும் வெங்காயத்தில் பெருமளவு, வங்கதேசம், மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. முன்பு, ஏற்றுமதிக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயம் இருந்தது. ஆனால், கடந்த ஆண்டில் இருந்து இந்த குறைந்தபட்ச விலை நிர்ணய முறையும் நீக்கப்பட்டு விட்டது.

இதனால் உள்நாட்டில் வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளபோதிலும் வெங்காயம் ஏற்றுமதி எந்த தடையும் இல்லாமல் நடந்து வருகிறது. வெங்காயம் விலை பொது மக்களை அதிகம் பாதிக்கும் விஷயம் என்பதால், இது அரசியலிலும் எதிரொலிக்கிறது. டெல்லியில் வெங்காயத்தின் விலையேற்றத்தால் பா.ஜ. ஆட்சியை இழந்தது குறிப்பிடத்தக்கது.
இந்நிலையில், தற்போது வெங்காயத்தின் விலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டிய அவசியம் மத்திய அரசுக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் அதன் ஏற்றுமதியை தடை செய்வது உள்ளிட்ட பல்வேறு வழிமுறைகளை மத்திய அரசு ஆராய்ந்து வருகிறது.

எனினும், அக்டோபர் மாதத்துக்கு பின்னர் வெங்காயம் அறுவடை தொடங்கும் என்பதால், அப்போது மீண்டும் விலை குறைந்து விடவும் வாய்ப்புள்ளது. இதனால் உடனடியாக ஒட்டுமொத்தமாக ஏற்றுமதிக்கு தடை விதித்து விடாமல், அதன் அளவை குறைத்து, அக்டோபர் மாதத்துக்கு பின்னர் புதிய வெங்காயங்கள் வருகையை பார்த்துவிட்டு, ஏற்றுமதிக்கு ஒட்டுமொத்தமாக தடை விதிப்பது தொடர்பாக அரசு முடிவு செய்ய வாய்ப்புள்ளது என்று மத்திய அரசின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

**பசுந்தாள் உரப்பயிர் சாகுபடி**

சேதுபாவாசத்திரம்: சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் பெரியசாமி, வேளாண் அலுவலர் மதியரசன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: மகத்தான மகசூல் பெறவேண்டுமென்றால் அதிக ளவு இயற்கை உரங்களை மண்ணில் இடவேண்டும். இதில் முக்கிய பங்கு வகிப் பது பசுந்தாள் உரங்கள் மற் றும் பசுந்தழை உரங்களாகும். பசுந்தாள் உரத்தில் தக்கை பூண்டு, சணப்பு, கொளிஞ்சி, அகத்தி, சீமை அகத்தி, பிள்ளிபயிர் ஆகியன சிறந்தவையாகும். பசுந்தாள் உரப்பயிர் களால் பயிர்வகை இனத்தை சேர்ந்த பசுந்தாள் உரப்பயிர்கள் காற்றில் உள்ள தழைசத்தை கிரகித்து 70 சதவீதம் வரை வேர்முடிச்சுகளில் நிலைநிறுத்தி அதில் ஒருபகுதியை மண்ணில் சேர்ப்பதால் நிலம் வளமடைகிறது. ஒரு ஏக்கரில் 25-45 கிலோ வரை தழை சத்தை மண்ணிற்கு கொடுக்கிறது. மண் அமைப்பை சீராக்குகிறது. மண் அரிப்பை தடுத்து மேல் மண் இழப்பை தடுக்கிறது. மண்ணிற்கு வளம் சேர்ப் பது மட்டுமின்றி பிடிப்பு பயிராகவும், நிழற்பயிராகவும், மூடுபயிராகவும், தீவனப்பயிராகவும் பயன்படுகிறது. மண்ணின் கரிமப்பொருட்களை (ஆர்கானிக் மேட்டர்) அதிகரிக்க செய்கிறது. களிமண்ணில் இளக்கம் கொடுத்து நீரின் ஊடுருவி பாயும்

தன்மையையும், காற்றோட்டத்தையும் அதிகரிக்க செய்கி றது. பசுந்தாள் எரு பயிரின் பேரூட்ட சத்தான தழை சத்து மண்ணில் இருந்து நீர் மூலம் விரையமாவதை தடுத்து நிறுத்த உதவுகிறது. நுண்ணூட்ட சத்துக்களை உறிஞ்சி தன்னுடன் வைத்துக்கொண்டு பின்னர் மண்ணில் உள்ள பயிருக்கு தேவைப்படும்போது எளி தில் கிடைக்கச்செய்கிறது. கீழ்படைகளிலுள்ள (சப்சா யில்) சத்துக்களை கிரகித்து அதை மேல்படைகளில் (சர்பேஸ்சாயில்) சேர்க்கிறது. பசுந்தாளுரப்பயிர்கள் நிலத்தில் சேரும்போது அங்குள்ள நுண்ணுயிர்கள் விரைவாக பெருகி அவற்றின் செயல்திறன் ஊக்குவிக்கப்படுகிறது. எனவே அனைத்து விவசாயிகளும் பசுந்தாளுர பயிர்களை பயிரிட்டு பூக்கும் தருணத்தில் மடக்கி மண்வளம் பெருகி உள்ள நிலத்தில் சாகுபடி செய்து அதிக மகசூலும் லாபமும் பெற வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளனர்.

**அரசுக்கு பாமக கோரிக்கை பருவ மழை பொய்த்ததால் விவசாயிகளுக்கு நிவாரணம்**

புதுவை& மயிலம் சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ அரவிந்தர் பொறியியல் கல்லூரி வளாகத்தில், நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் மரக்கன்றுகள் நடும் விழா நடந்தது. புதுச்சேரி, :புதுவை மாநில பாமக நிர்வாகக்குழு கூட்டம் நடந்தது. மாநில செயலாளர் அனந்தராமன் தலைமை தாங்கினார். மாவட்ட தலைவர் சுப்பிரமணியன், துணை செயலாளர்கள் ஜெயபாலன், ரவி, தொழிற்சங்க செயலாளர் தட்சணாமூர்த்தி, இளைஞர் அணி தலைவர் அறிவழகன், இளைஞரணி துணை தலைவர் கணபதி, நகர தலைவர் பாலகிருஷ்ணன், முன்னாள் கவுன்சிலர் வடிவேலு, சேகர் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.கூட்டத்தில், பசுமை தாயகம் நாளையொட்டி வருகிற 25ம் தேதி புதுவையின் அனைத்து தொகுதிகளிலும் 5ஆயிரம் மரக்கன்றுகள் நடுவது என்றும், நிகழ்ச்சியில் அனைத்து மாநில, மாவட்ட, தொகுதி பொறுப்பாளர்கள் கலந்து கொள்ள வேண்டும்.

காவிரியின் கடைமடை பகுதியான காரைக்காலில் பருவமழை பொய்த்து விட்டதால் அரசு வறட்சி பகுதியாக அறிவித்து ரூ.9.50 கோடி நிவாரண உதவி வழங்கியது. புதுவை பகுதியிலும் பருவமழை பொய்த்ததால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே புதுவை பகுதி விவசாயிகளுக்கும் உடனே நிவாரண உதவி வழங்க சட்டமன்ற கூட்டத்தில் அறிவிப்பு வெளியிட வேண்டும். புதுவை சட்டக்கல்லூரியில் எம்எல் பட்டமேற்படிப்பு பிரச்னையில் அரசு தலையிட்டு அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து மாணவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**வட்டார விவசாயிகள் ஆலோசனை கூட்டம்**

நாமக்கல்: வேளாண்மை உதவி இயக்குனர் ஜோ தேடியஸ் வெளியிட்டுள்ள அறிக்கை: மாநில அளவில் விவசாயிகளின் களப்பிரச்னைகள், தேவைகளை அறிந்து, தீர்வுகாண ஆகஸ்ட் 2வது வாரத்தில் தமிழ்நாடு வேளா ண்மை பல்கலைக்கழகத்தில் வேளாண் துறை அமைச்சர் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடக்கிறது. இது தொடர்பாக வட்டார அளவி லான விவசாயிகள் ஆலோசனை கூட்டம் வரும் 24ம் தேதி காலை 11 மணிக்கு நாமக்கல் தாசில்தார் அலுவலகத்தில் நடக்கிறது. இதில் வேளாண் அறிவியல் மையம், கூட்டுறவுத்துறை மற்றும் வேளாண்துறையுடன் தொடர்புடைய பிற துறை களை சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர். இவ்வாறு, உதவி இயக்குனர் ஜோதேடியஸ் தெரிவித்துள்ளார்.

**மஞ்சூர் பகுதியில் மலைகாய்கறி பயிர்கள் நீரில் மூழ்கின**

மஞ்சூர்: மஞ்சூர் சுற்று பகுதிகளில் சூறாவளி காற்றுடன் பெய்த மழையில் மரங்கள் விழுந்ததால் மின் கம்பங்கள் முறிந்து மின் விநியோகம் பாதிக்கப்பட்டது. மஞ்சூர் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த சில தினங்களாக சூறாவளி காற்றுடன்

இடைவிடாது பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து நேற்றுமுன்தினம் மழையுடன் வீசிய பலத்த காற்றில் கோரக்குந்தா பகுதியில் ஏராளமான மரங்கள் விழுந்தது. இப்பகுதியில் அமைந்துள்ள பெரும்பாலான மின் கம்பங்களும் வன பகுதிகளில் உள்ளதால் மரங்கள் விழுந்ததில் 4 மின் கம்பங்கள் அடியோடு சாய்ந்து விழுந்தது. இதனால் கோரக்குந்தா பகுதியில் மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டது.

தகவலறிந்த குந்தா உதவி பொறி யாளர் சுரேஷ் தலைமையில் ஊழியர்கள் விரைந்து சென்று சீரமைப்பு பணிகளில் ஈடுபட்டனர்.
மேலும் எமரால்டு, இத்தலார், நஞ்சநாடு, காயகண்டி, நேருநகர், சுற்றுப் புற பகுதிகளில் பெரு மளவு மலை காய்கறிகள் பயிரிடப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் கன மழை யால் விவசாய விளை நிலங் கள் மழை வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. சில இடங்களில் மலை காய்கறி தோட்டங்களில் மண் அரிப்புகளும் ஏற்பட்டுள்ளது. குந்தா பாலம், சேரனுூர், தொட்டக்கம்பை, பெரியார் நகர், அண்ணாநகர், ஓணிகண்டி உள்ளிட்ட தாழ்வான பகுதிகளில் நிலச்சரிவு அபாயமும் ஏற்பட்டுள்ளது.

**பழங்குடியின விவசாயிகளுக்கு இலவச வேளாண் இடுபொருட்கள்**

பந்தலூர்: பந்தலூர் அருகே ஏலமன்னா சிடிஆர்டி நிறுவனம், கேர் இந்தியா வாழ்க்கை திட்டம்  ஆகியவை சார்பில் பாரீஸ் அரங்கத்தில் வட்டார அளவிலான பழங்குடியினர் சிறு தேயிலை உற்பத்தியாளர் ஆலோசனை கூட்டம் நடந்தது. சிடிஆர்டி நிறுவனர் ரங்கநாதன் தலைமை வகித்தார். தேயிலை வாரிய இயக்குனர் அம்பலவாணன், பழங்குடியின சிறு, குறு விவசாயிகளுக்கு விவசாய இடுபொருட்களை வழங்கி பேசுகையில், ‘‘பழங்குடியினர் 10 சென்ட் முதல் ஒரு ஏக்கர் வரை தேயிலை விவசாயம் செய்து வருகின்றனர். இதற்கு அதிகப்படியான

ரசாயன உரம் இடாமல் இயற்கை உரமிட்டு வளர்க்கின்றனர்.

சில்வர்டிப் டீ தயாரிக்க சிறு, குறு விவசாயிகள் முன்வர வேண்டும். நல்ல விலை கிடைப்பதால் விவசாயிகள் வாழ்க்கை தரம் உயரும்,'' என்றார்.

சிடிஆர்டி நிறுவனர் ரங்கநாதன் பேசுகையில், ''48 கிராமங்களை சேர்ந்த சிறு, குறு விவசாயிகள் 9 சங்கங்களை உருவாக்கி உள்ளனர்.

இதில் 120 பெண்கள் உட்பட 520 பேர் உறுப்பினராக உள்ளனர். இவர்கள் தினமும் 20 டன் தேயிலை உற்பத்தி செய்து வருகின்றனர்,'' என்றார்.

இதில், ஒருங்கிணைப்பாளர் ராமமூர்த்தி, நெல்லியாளம் நகராட்சி தலைவர் அமிர்தலிங்கம், பஞ்சலூர் மத்திய கூட்டுறவு வங்கி மேலாளர் அனில், தேயிலை வாரிய அலுவலர் அன்பரசு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**பால் உற்பத்தி அதிகரிக்கும் கால்நடை இணை உணவான அசோலா**

கூடலூர்: கூடலூர் அடுத்த நிலாக்கோட்டை, நெல்லியாளம் சுற்றுப்புற கிராமங்களில் கால்நடைகளுக்கு தேவையான இணை உணவான அசோலா வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் நடந்தது. பார்ம் 2 இயற்கை விவசாய அமைப்பு ஒருங்கிணைப்பாளர் ஆரோக்யசாமி, விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். அவுண்டில் மற்றும் மரப்பாலம் பகுதியில் 20க்கும் மேற்பட்ட விவசாயிகள் அசோலா பயிரிட்டு வருகின்றனர். அசோலா, புரோட்டீன், கால்சியம் சத்து நிறைந்தது. வேகமாக வளரும் தன்மை உடையது. பால் உற்பத்தி அதிகரிக்கும். அதனால் அசோலாவில், கால்நடை வளர்ப்பு விவசாயிகள் அதிகம் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**பவானிசாகர் நீர்மட்டம் உயர்வு**

ஈரோடு: பவானிசாகர் அணையில் 105 அடி உயரத்திற்கு தண்ணீர் சேமிக்க முடியும். மொத்தம் 32 டிஎம்சி., கொள்ளளவு கொண்ட அணையின் நீர்மட்டம்

கடந்த ஜூன் மாத துவக்கத்தில் வெறும் 27 அடியாக இருந்தது. அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான நீலகிரி மற்றும் கேரளாவில் கடும் வறட்சி நீடித்ததால் அணைக்கு நீர்வரத்து வெகுவாக குறைந்திருந்தது. அணையில் மொத்தமே 2.5 டிஎம்சிக்கும் குறைவான நீர்இருப்பு இருந்ததால் குடிநீருக்கே தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவானது. இந்நிலையில் ஜூன் மாதம் கடைசி இரண்டு வாரங்கள் பெய்த மழை யால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயரத்துவங்கியது. ஜூலை துவக்கத்தில் அணையின் நீர்மட்டம் 50 அடியை தாண்டியது. இதற்கிடையே அணையிலிருந்து தடப்பள்ளி - அரக்கன்கோட்டை பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்பட்டதால் நீர்மட்டம் சற்று சரிவடைந்து வந்தது.இருப்பினும், ஓரளவு நீர்வரத்து இருந்ததால் அணையின் நீர்மட்டம் சிறிது, சிறிதாக உயர்ந்து நேற்று முன்தினம் (20ம் தேதி) காலை அணையின் நீர்மட்டம் 65.90 அடியாக இருந்தது. தற்போது கேரள-தமிழக எல்லையில் கோவை மாவட்டத்தில் அமைந்துள்ள பில்லூர் அணை நிரம்பியதால் அணைக்கு வரும் உபரிநீர் பவானி ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் கடந்த 2 நாட்களாக பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதேபோல நீலகிரி மாவட்டம் கூடலூர், நடுவட்டம், கிளன்மார்க்கன், மசினகுடி, மோயாறு பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக பவானிசாகர் அணை நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. நேற்று காலை 8 மணிக்கு அணையின் நீர்வரத்து 5349 கனஅடியாக இருந்தது. பவானிசாகர் அணையில் இருந்து பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்காக 900 கனஅடி நீர் திறக்கப்பட்டிருந்தது. அணையில் நேற்று காலை 8 மணி நிலவரப்படி 9.89 டிஎம்சி நீர்இருப்பு உள்ளது. நேற்று முன்தினம் காலை முதல் நேற்று காலை வரை அணையின் நீர்மட்டம் 1.5 அடி உயர்ந்துள்ளது.

அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால் காய்ந்து வரும் தென்னை, கரும்பு பயிர்களை காப்பாற்ற கீழ்பவானி வாய்க்காலில் ஜூலை 20ம் தேதியே (நேற்று

முன்தினம்) உயிர் தண்ணீர் திறந்து விட வேண்டும் என விவசாயிகள் வேண்டுகோள் விடுத்திருந்தனர். ஆனால் தண்ணீர் திறந்து விட அரசு உத்தரவிடவில்லை. உடனடியாக பவானிசாகர் அ¬ ணயிலிருந்து கீழ்பவானி வாய்க்காலில் உயிர் தண்ணீர் திறந்து விட கீழ்பவானி விவசாயிகள் மீண்டும் வலியுறுத்தி உள்ளனர்.

**திருமூர்த்தி அணையில் வரலாறு காணாத வறட்சி இன்னும் ஒரு வாரத்துக்கே குடிநீர்**

உடுமலை: திருமூர்த்தி அணையின் நீர்மட்டம் வரலாறு காணாத வகையில் வீழ்ச்சியடைந்துள்ளது. இருக்கும் இரண்டரை அடி தண்ணீர் இன்னும் ஒரு வாரத்துக்கே குடிநீருக்கு போதுமானதாக இருக்கும். எனவே கான்டூர் கால்வாயில் தண்ணீர் திறப்பை அனைவரும் எதிர்பார்த்துள்ளனர்,

திருப்பூர் மாவட்டம் உடுமலை அருகே உள்ளது திருமூர்த்தி அணை. பிஏபி பாசனத்திட்ட அணை களில் ஒன்றான இதற்கு பரம்பிக்குளம் அணையில் இருந்து கான்டூர் கால்வாய் மூலம் தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. பாலாற்றில் இருந்தும் தண்ணீர் வருகிறது. இந்த அணையின் உதவியால் திருப்பூர்,கோவை மாவட்டங்களில் 3.78லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. மேலும் தளி வாய்க்கால் மூலம் 8 குளம் பாசனத்தில் 3 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. தென்னை, மக்காச்சோளம், உளுந்து, தட்டைப்பயறு, நிலக்கடலை, காலிபிளவர், பீட்ரூட் போன்றவை முக்கிய சாகுபடி பயிர்களாக உள்ளன.

உடுமலை நகராட்சியில் உள்ள 33 வார்டுகளை சேர்ந்த 67 ஆயிரம் மக்களின் குடிநீர் தேவையை இந்த அணை பூர்த்தி செய்கிறது. நகரில் மட்டும் 10ஆயிரத்து 500 குடிநீர் இணைப்புகள் உள்ளன. மேலும் வழியோர கிராமங்களான தளி பேரூராட்சியில் உள்ள கிராமங்கள், ஜல்லிப்பட்டி, பள்ளபாளையம், போடிப்பட்டி

கிராமங்களுக்கும் இங்கிருந்துதான் குடிநீர் செல்கிறது. இதுதவிர கணக்கம்பாளையம், பூலாங்கிணர் கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் உடுமலை ஒன்றியத்தில் ஏராளமான கிராமங்கள், மற்றும் புதிய திருமூர்த்தி கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் உடுமலை, குடிமங்கலம், மடத்துக்குளம் ஒன்றியத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்கள் என மொத்தம் 150க்கும் மேற்பட்ட கிராமங்களின் குடிநீர் ஆதாரமாக திருமூர்த்தி அணை விளங்குகிறது.

தற்போது அணையில் 2.64 அடி தண்ணீரே உள்ளது. வரலாறு காணாத வறட்சியால் கணக்கம்பாளையம், பூலாங்கிணர், திருமூர்த்தி கூட்டு குடிநீர் திட்டங்கள் மூலம் போதுமான குடிநீர் வினியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.இதனால் நூற்றுக்கணக்கான கிராமங்களில் கடும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அணையில் குட்டை போல் கிடக்கும் தண்ணீரை கால்வாய் வெட்டி வெளியேற்றி உடுமலை நகராட்சிக்கும் பிற பகுதிகளுக்கும் வினியோகிக்கப்பட்டு வருகிறது. அதுவும் இன்னும் ஒரு வாரத்துக்குத்தான் போதுமானதாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. இதனால் இந்த அணையை நம்பியுள்ள பகுதிகளில் குடிநீர் பிரச்னை பூதாகரமாக எழுந்துள்ளது.

பரம்பிக்குளம் அணையில் இருந்து திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் கொண்டு வரும் கான்டூர் கால் வாயில் பராமரிப்பு பணிகள் நடந்து வருகின்றன. பருவமழை காரணமாக இப்பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளது. ஆகஸ்ட் மாதம் அணைக்கு தண்ணீர் திறக்கப்பட வேண்டும். ஆனால் சீரமைப்பு பணியின் தாமதத்தால் தண்ணீர் திறப்பு கேள்விக்குறியாக உள்ளது. இதனால் கான்டூர் கால்வாய் வழியாக அணைக்கு நீர்வரத்துக்கு வழியில்லை. பஞ்சலிங்க அருவியில் விழும் தண்ணீர் பாலாறு வழியாக திருமூர்த்தி அணைக்கு வருகிறது. அதன்மூலம் வரத்து 4 கனஅடி மட்டுமே. எனவே கான்டூர் கால்வாய் பராமரிப்பு பணியை விரைந்து முடிக்க

வேண்டுமென பொதுமக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.இதுகுறித்து அதிகாரிகளிடம் கேட்டதற்கு கால்வாய் பராமரிப்பு பெரும்பகுதி முடிந்து விட்டது. முழு பணியும் இன்னும் 10 நாட்களில் முடிந்து விடும். அதன்பிறகு பரம்பிக்குளம் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படும் என்று நம்பிக்கை தெரிவித்தனர்.

**மாவட்டத்தில் மழை நீடிப்பு அணைகளில் நீர் மட்டம் உயர்கிறது**

கோவை: கோவையில் மாவட்டத்தில் மழை நீடிக்கிறது. சிறுவாணி, பரம்பிக்குளம் ஆழியாறு அணைகளின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது.
கோவை மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் அதை சுற்றியுள்ள பகுதியில் மழை பெய்து வருகிறது. சின்னகல்லார், சின்கோனா, பரம்பிக்குளம், ஆனைமலை, பொள்ளாச்சி, சிறுவாணி பகுதியில் கனமழை பெய்கிறது. கடந்த ஒரு மாதத்தில் சிறுவாணி அணையின் நீர் மட்டம் 14.8 மீட்டர் அளவிற்கு உயர்ந்து விட்டது. இன்னும் 4.5 மீட்டர் அளவிற்கு நீர் மட்டம் உயர்ந்தால் அணை நிரம்பி விடும் வாய்ப்புள்ளது.அணையில் இருந்து தினமும் 8 கோடி லிட்டர் குடிநீர் பெறப்படுகிறது. ஆழியாறு அணையின் மொத்த நீர் மட்ட உயரம் 120 அடி. நேற்று அணை நீர் மட்டம் 91.90 அடியாக இருந்தது. கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது நீர் மட்டம் 11 அடி உயர்ந்துள்ளது.

பரம்பிக்குளம் நீர் தேக்க உயரம் 72 அடி. நேற்று அணை நீர் மட்டம் 52.49 அடியாக இருந்தது. சோலையாறு நீர் மட்டம் உயர்ந்து நிரம்பி வழிகிறது. மேலும் சில நாட்களுக்கு மழை நீடிக்கும் வாய்ப்பு இருப்பதால், கோவை மாவட்டத்தில் உள்ள நீர் தேக்கங்களில் நீர் மட்டம் வெகுவாக உயரும் வாய்ப்புள்ளது.
மாவட்ட அளவில், வெப்ப நிலை மிகவும் குறைந்து விட்டது. அதிகபட்ச சராசரி வெப்ப நிலை 24 டிகிரியாகவும், குறைந்தபட்ச வெப்ப நிலை 17 டிகிரியாகவும் உள்ளது. மழையுடன் குளிரும் வாட்டுவதால் பொதுமக்கள் நடுக்கத்துடன்

நடமாடவேண்டியுள்ளது.நேற்று முன்தினம் மழை அளவு மாவட்டம் முழுவதும் பெய்த மழை அளவு  மி.மீ. விவரம் வருமாறு: பீளமேடு விமான நிலையம் .7, மேட்டுப்பாளையம் - 1.20, பொள்ளாச்சி- 7, வேளாண்மை பல்கலைக்கழகம்-2.20, சின்கோனா-63, சின்னக்கல்லார்-62, வால்பாறை பி.ஏ.பி. 54.50, வால்பாறை தாலுகா-50, கோவை தெற்கு- 2.30. நேற்று பகலில் மழை விட்டு விட்டு தூறிக்கொண்டே இருந்தது. இதனால் இரவில் குளிர் நிலவியது.

**10ஆண்டுகளாக காத்திருக்கும் விவசாயிகளுக்கு உடனடியாக மின்இணைப்பு வழங்க கோரிக்கை**

திருச்சி: 10 வருடமாக மின் இணைப்புக்காக காத்திருக்கும் விவசாயிகளுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று திருச்சியில் நடந்த மாவட்ட செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழக ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்க மாவட்ட செயற்குழு கூட்டம் நம்பர் 1டோல்கேட்டில் நடந்தது. மாநில தலைவர் விஸ்வநாதன் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் அன்பழகன் வரவேற்றார். கூட்டுறவு தொடக்க வேளாண்மை வங்கி மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் வாங்கிய கடனை தள்ளுபடி செய்ய வேண்டும். காவிரி மேலாண்மை வாரியமும், காவிரி நீர் அளவீட்டு ஒழுங்குமுறை ஆணையமும் போர்க்கால அடிப்படையில் அமைக்கப்பட வேண்டும்.  10 ஆண்டுகளுக்கு மேலாக விவசாய மின் இணைப்பு கேட்டு காத்திருப்போருக்கும். 90 நாளில் விவசாய மின் இணைப்பு கேட்டு பணம் கட்டியுள்ள விவசாயிகளுக்கும் உடனடியாக மின் இணைப்பு வழங்க வேண்டும். உரம், பூச்சிகொல்லி மருந்து இலவசமாக வழங்க வேண்டும்.  மாவட்டத் தலைவர் ஜெயராமன் நன்றி கூறினார்.

**சொட்டுநீர் பாசனத்திற்கு 100 சதவீத மானியம் வேளாண் உதவி இயக்குநர் தகவல்**

காரைக்குடி: சொட்டு நீர் பாசனம் அமைக்கும் விவசாயிகளுக்கு முழுமானியம் வழங்கப்பட உள்ளதாக கல்லல் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கணேசன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் அறிக்கை: சொட்டு நீர் பாசனம் அமைப்பதால் 70 சதவீத நீர் சேமிக்கப்படுகிறது. களைகள் பெருமளவில் கட்டுப்படுத்தப்படுகிறது. பயிருக்கு தேவையான உரங்களை நீரில் கரைத்து இடுவதால் உரச் செலவு குறைகிறது. இதனால் மகசூல் 30 சதவீதம் அதிமாக கிடைக்கும். கல்லல் வட்டாரத்தை பொறுத்தவரை சொட்டு நீர் பாசன திட்டத்தின் கீழ் கரும்பு, தென்னை, மக்காச்சோளம் மற்றும் பயறு சாகுபடி செய்ய உள்ள விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.43,816 முழு மானியமாக வழங்கப்பட உள்ளது.  இத்திட்டத்தில் பயனடைய விரும்பும் விவசாயிகள் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து சிறு, குறு விவசாயிகளுக்கான சான்றிதழ், சாகுபடி செய்த பயிர்களுக்கான அடங்கலை பெற்று வர வேண்டும். சிறு, குறு விவசாயிகளுக்கு முழுமானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்கப்படும் என்றார். மேலும் விவரங்களுக்கு 04565 - 274515 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.